
# ஞானச்சுடர்




கார்த்திகை

2024

323ஆவது மலர்

வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள் வழி



**அரங்கின்றி வட்டாடி அற்றே நிரம்பிய**
**நூலின்றிக் கோட்டி கொளல்.**

**பொருள் :** அறிவு நிரம்புவதற்கேதுவாகிய நூல்களைக் கல்லாது ஒருவன் சபையின்கண் பேசுதல் சூதாடு பலகை இல்லாமல் காய்களை உருட்டி ஆடினாற்போல் பயனற்றதாகும். (401)

**கல்லாதான் சொற்கா முறுதல் முலையிரண்டும்**
**இல்லாதாள் பெண்காமுற் றற்று.**


**பொருள் :** கல்வி அறிவில்லாதவன் சபையில் ஒன்றைப் பேச நினைத்தல் இரண்டு தனங்களுமில்லாத பெண், பெண் தன்மையை விரும்பியது போலாகும். (402)

---

# நற்சிந்தனை

*மறப்பேனோ குருநாதன் தன்னை*

**இலங்கை என் திருநாடு**



எல்லார்க்குந் தம்பிரா னென்னைவந் தாண்டுகொண்டான்
கொல்லேன்பொய் சொல்லேன்யான் குருமொழியை மறக்கிலேன்
நில்லாத காயத்தை நிலையெனவே யெண்ணுகிலேன்
செல்லாரும் பொழில்சூழு மிலங்கையென் திருநாடே. 01

என்னைவிட் டகலாம லெப்போது மிருக்கின்ற
அன்னையொப் பானவனை யடியேன்யான் மறப்பேனோ
முன்னைநா ளிராவணன்றன் முடிபத்தும் நெரித்தவன்
தென்னைபனை சேரிலங்கை சிறியேன்றன் திருநாடே. 02

நீர்நிலந்தீ கால்வானாய் நின்றபிரான் சிறியேனை
ஓர்கணமும் பிரிவறியான் உத்தமர்தஞ் சிந்தையான்
கார்நிற மேனியனுங் கமலனுங் காண்கிலான்
சீர்பெறூஉ மிலங்கையென் திருநாடு கண்டுகொளே. 03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்




வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் பழைய தேர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 3 சுடர் - 323



2024 **பொருளடக்கம்** கார்த்திகை


| | | |
|---|---|---|
| இன்பம் பொங்கும்... | கே.எஸ். சிவஞானராஜா | 01 - 04 |
| பகவத்கீதையின் தத்துவம் | பூ. சோதிநாதன் | 05 - 08 |
| திருவாசகத்தில் வெண்பா | முருகவே பரமநாதன் | 09 - 13 |
| தியான யோகம் என்னும்... | கு. சிவபாலராஜா | 14 - 17 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 18 - 19 |
| ஆண்டவன் ஒருவன்... | மு. செல்லத்தம்பி | 20 - 21 |
| இறையும் இசையும் | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 22 - 23 |
| ஞான நூல்கள் கூறும்... | செ. சிவபாதம் | 24 - 29 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 30 - 33 |
| சண்டேசர் | திருமதி பொ. திலகவதி | 34 - 36 |
| சுயநலம் பொது வாழ்வை... | சி. நற்குணலிங்கம் | 37 - 38 |
| சற்குருநாதனே... | திருமதி ந. பரமேஸ்வரி | 39 - 40 |
| படங்கள் தரும் பதிவுகள் | சந்நிதியான் ஆச்சிரமம் | 41 - 47 |
| தில்லைக் கூத்தனின்... | திருமதி பா. சிவனேஸ்வரி | 48 - 50 |
| வாசகர் போட்டி | சந்நிதியான் ஆச்சிரமம் | 51 - 52 |


**வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)**

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

Printed & Published By:
Sannithiyan Achchirama Saiva Kalai Panpaddu Peravai.
Selvasannithi, Thondaimanaru.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஞானச்சுடர்
# ஐப்பசி மாத வெளியீடு

**வெளியீட்டுரை:**

ஞானச்சுடர் 322ஆவது மலருக்காகிய வெளியீட்டுரையினை ஆற்ற இருந்த திரு ஐ.கோ. சந்திரசேகரம் அவர்கள் தவிர்க்க முடியாத காரணத்தால் வருகை தராதபடியால் அன்றையதினம் ஆலய தரிசனத்துக்காக வந்திருந்த பேரவையின் செயற்பாட்டு உறுப்பின ராக விளங்குபவரும் சிறந்த வில்லிசைக் கலைஞனாகவும் மிளிரும் திரு க. சத்தியதாஸ் அவர்கள் மலருக்குரிய வெளியீட்டுரையினை ஆற்றினார்கள்.

ஆரம்ப காலத்தில் வாராந்த நிகழ்வில் வில்லிசையாற்ற வந்த என்னை படிப்படியாக இத்தகு பெருமையை அடைவதற்கு சந்நிதியான் ஆச்சிரமத்தினரும் சுவாமி அவர்களும் ஒரு உந்துசக்தியாக விளங்கியதோடு, இன்று இப் பேரவையின் வளர்ச்சிக்கு ஒரு அங்கமாக விளங்குவதையிட்டும் நான் பெருமைகொள்கின்றேன்.

இதன் அடிப்படையில் இன்று ஆலயத்துக்கு வருகை தந்த என்னை இம் மாத மலருக்கு வெளியீட்டுரை ஆற்றுவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது சந்நிதியானின் பேரருள் என்றே கூறவேண்டும் என்று கூறி, அன்றைய மலருக்கான வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மதிப்பீட்டுரை:**

ஞானச்சுடர் ஐப்பசி மாத மலருக்குரிய மதிப்பீட்டுரையினை இந்து சமய ஆசிரிய ஆலோசகராக விளங்குபவரும் சைவப்புலவருமாகிய திரு செ. கந்தசத்தியதாசன் அவர்கள் ஆற்றினார்கள்.

அவர் தனது உரையின்மூலம் ஆச்சிரமம் பலவிதமான மனிதநேயமிக்க பணிகளை ஆற்றுவதையிட்டு மிகவும் பெருமைப்படுகின்றேன். அதிலும் குறிப்பாக இனம், மதம் என்பவற்றைப் பாராது இப் பணியை சகல சமூகத்தினருக்கும் ஆற்றுவது மிகவும் பெருமைக்குரிய விடயம். கடந்த 25 வருடங்களுக்கு மேலாக ஒரு ஆன்மீகம் சார்ந்த மலரை தொடராக வெளியிடுவது என்பது ஒரு கடினமான செயல் என்றே கூறவேண்டும். ஆனால் இவ்விடத்தில் இம் மலர் வெளியீடு இலகுவான முறையில் மாதாந்தம் தொடராக வெளிவருவது சந்நிதி வேலவனது பேரருள் என்பது ஒரு நிதர்சனமான உண்மை ஆகும். இதை உணர்ந்தவர்களுக்கு நன்கு புலப்படும்.

மலரில் இடம்பெற்ற ஒருசில கட்டுரைகளின் தன்மைபற்றி கூறுகையில் இளைய சமூகத்தின் எழுத்தாற்றலை மேம்படுத்துவதற்கும் அவர்களது திறமைகளை மென்மேலும் வளர்ப்பதற்கும் இம் மலர் வெளியீடு ஓர் காத்திரமான பங்களிப்பை வழங்கி வருகின்றது என்று கூறி தனது மதிப்பீட்டுரையை இனிதே நிறைவு செய்தார். அதனைத் தொடர்ந்து சிறப்புப்பிரதி வழங்கும் நிகழ்வுடன் அன்றைய நிகழ்வு இனிதே நிறைவேறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

இவ்வுலகில் மனிதர்கள் யாவரும் தமக்கும் தமது வருங்காலச் சந்ததியினருக்கும் வேண்டுமெனத் தேடி வைப்பது செல்வங்களே. இச் செல்வங்கள் என நாம் அனைவரும் நினைப்பது வீடு, பணம், மனைவி மக்கள், நிலபுலம், ஆடை, ஆபரணங்கள் முதலியனவையாகத்தான் இருப்பது இயல்பு. நாம் மரணமடைந்ததும் இந்த உடம்பை விட்டு உயிரானது புறப்படும்போது மேற்கூறிய செல்வங்களானது உடன் வரமாட்டாது என்பது கண்கூடு. எல்லோருமே இதனை ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம். இந்தக் கருத்துக்கு எந்தவித மாற்றமோ ஐயப்பாடோ இருக்க முடியாது.

ஆனால் எம்முடன் கூடவராத இவைகளைத்தான் நாம் தேடுவதிலேயே நம் வாழ்நாள் முழுவதையும் செலவழிப்பது தக்கதன்று. அறிவு என்ற ஒரேயொரு செல்வம் மட்டுமே நாம் எங்கு சென்றாலும் எம்முடன் தொடர்ந்து வரும். ஆகவே மற்ற செல்வங்களை தேடித் திரிவதோடு நின்றுவிடாமல் நாம் அறிவையும் அவசியம் தேடிப் பெறவேண்டும். இதற்கு திருவள்ளுவரும்,

"அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்"

இவ்வாறு விவரிக்கின்றார்.

நாம் அறிவு என்ற செல்வத்தை வளர்ப்பதற்கான வழி யாது? என நோக்குவோமானால் சிறந்த அறிவு நூல்களைத் தேடிப் படிக்குந்தோறும் எம்மிடம் உள்ள அறியாமை தேய்ந்து அறிவுச் செல்வம் வளரும்.

இதற்கு அமைவாக அண்மையில் திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள் புலம்பெயர் தேசத்தில் தற்சமயம் இருந்தாலும் அவர் யாழ் மாவட்டத்தில் இருந்த காலங்களில் பேரவையினால் வெளியீடு செய்யப்பட்டுவரும் ஞானச்சுடர் மலர்களுக்கு பலவிதமான ஆக்கங்களை தொடராகவும், தனித்தனியாகவும் எழுதி வந்தார்கள். அதன் அடிப்படையில் கடந்த காலங்களில் ஞானச்சுடர் மலரில் வந்திருந்த ஒரு சில ஆக்கங்களை தொகுத்து நான்கு புதிய நூலாக வெளியிட்டுள்ளமை அறிவு சார்ந்த செயலாகவே அமைந்துள்ளது. அவர் வெளியிட்ட நூல்களின் பெயர்கள்: "இறப்பை எண்ணி", "எங்கும் எதிலும் இறைவன்", "வேண்டுதல்கள்", "ஆட்கொண்டபோது" என்னும் தலைப்புக்களுடன் கூடிய ஆக்கங்களை நூலுருவாக்கி உள்ளார்.

இந் நூல்களைப் பெற்று வாசிப்பதன் ஊடாக எமது அறிவுதானத்தை மேல்நிலைக்கு இட்டுச்செல்லக் காரணமாக அமைகின்றதோடு சமூகத்திற்கும் தேவையாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்த்திகைமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**S. சதாசிவமூர்த்தி**
(கனடா)

**K. கனகசபேசன்**
(கனடா)

**உரிமையாளர்**
(E.S.P. நாகரெட்ணம் அன்கோ, யாழ்ப்பாணம்)

**ச. ஜெயதாசன்**
(கருகம்பனை, காங்கேசந்துறை)

**திருமதி தங்கராசா சரஸ்வதி**
(புலோலி மேற்கு)

**ச. வைத்தியநாதக்குருக்கள்**
(கந்தவனக்கடவை, பொலிகண்டி)

**உரிமையாளர்**
(சிவா பிரதேர்ஸ், யாழ்ப்பாணம்)

**மா. ஞானலிங்கம்**
(ஆசிரியர், அபிராமி மகால், அச்சுவேலி)

**சி.வ. முருகையா**
(ஆசிரியர், பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலடி, இணுவில்)

**து. நாகேந்திரம்**
(நல்லூர்)

**S. மங்களரூபன்**
(கல்வளை வீதி, சண்டிலிப்பாய்)

**சின்னையா ரஞ்சிதமலர்**
(மல்லாகம்)

**த. கணபதிப்பிள்ளை**
(உடுப்பிட்டி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி. பகவத்சிங்கம்
(இளை. அதிபர், நீர்வேலி)
ம.க. ஸ்ரீதரன்
(கரவெட்டி)
இ. தம்பிரத்தினம்
(முருகேச பண்டிதனார் வீதி, சுண்ணாகம்)
திருமதி P. குகதாசன்
(K.K.S. வீதி, இணுவில்)
P. நமசிவாய
(அல்வாய் மத்தி)
இ. சிவராசா
(கரவெட்டி கிழக்கு)
சி. விஜயகுமாரன்
(உரும்பராய்)
தி. ஸ்ரீராகவன்
(வியாபாரிமூலை, பருத்தித்துறை)
செல்வநேசன் கஜன்
(கல்வளை வீதி, சண்டிலிப்பாய்)
க. பரராஜவிருந்தம்
(காவில், கரணவாய்)
யோ. கலைமகள்
(புத்தூர்)
கந்தசாமி கதிர்காமத்தம்பி
(மல்லியோடை, வல்வெட்டி)
K. மகேந்திரன் J.P.
(நவநீதபதி, இமையாணன்)
திரு செந்தில்நாதன்
(கொக்குவில் கிழக்கு)
R. பத்மா
(சுண்டிக்குளி)
கே.எஸ். ஆனந்தன்
(இணுவில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வைத்திலிங்கம் உதயமலர்**
(கரணவாய் தெற்கு)
**அ. குகனேஸ்வரன்**
(வயாவிளான்)
**அ. தில்லைநாதன்**
(சிவன்வீதி, ஆவரங்கால்)
**செ. பாலச்சந்திரன்**
(K.K.S. வீதி, யாழ்ப்பாணம்)
**சுபத்திரா விவேகானந்தன்**
(அளகொல்லை, அளவெட்டி)
**த. சந்திரசேகரம்**
(நாகர்கோவில்)
**கனகலிங்கம் மயூரன்**
(பாரதிவீதி, அச்சுவேலி)
**R. நாகராசா**
(சாவகச்சேரி)
**நீ. மயில்வாகனம் J.P.**
(வருணன், அச்சுவேலி)
**T.N. இராஜா**
(பொன்கிளர், சங்கானை)
**சோதிரட்ணம் அனுஷியா**
(அரசடி சந்தி, நவாலி)
**செ. உமாபதி**
(பிராமண வீதி, தும்பளை)
**V. சந்தனத்தேவன்**
(தூதாவளை, கரணவாய்)
**S. செந்தூரன்**
(மாருதி இல்லம், மாறாப்புலம், அல்வாய்)
**திருமதி தயாநிதி சுசிகலா**
(தெல்லிப்பழை)
**செ. சுப்பிரமணியம்**
(யாழ்ப்பாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**A. பிரதாபன்**

(சந்திரபுரம், உடுவில்)

**வை. இராசேந்திரம்**

(இணுவில்)

**திருமதி ஆறுமுகம் உமாதேவி**

(பண்ணாகம், சுழிபுரம்)

**திருமதி கிருஷ்ணகுமாரி கனகசிங்கம்**

(உரும்பராய்)

**V.S. மருதலிங்கம்**

(அரசடி சந்தி, மானிப்பாய்)

**அ. பாலேஸ்வரி**

(கதிரிப்பாய், அச்சுவேலி)

**செல்வி க. கமலாம்பிகை**

(ஆதவன் ஸ்ருடியோ, மீசாலை)

**க. திருச்செந்தூர்**

(வீரப்பதிராஜன், கரணவாய்)

**K. தங்கவேலாயுதம்**

(பருத்தித்துறை)

**சிவகுரு குகதாசன்**

(செல்வமதி, ஆவரங்கால்)

**மோகன் புவனா**

(புத்தூர்)

**வைத்திலிங்கம் பிரபாகரன்**

(துரைவீதி, கொக்குவில்)

**திருமதி பிரதீபன் பிரதீபா**

(அச்சுவேலி)

**க. இந்திராதேவி**

(பருத்தித்துறை)

**திரு ஐ. செல்வராஜா J.P**

(கரவெட்டி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்பம் பொங்கும் இனிய தீபாவளி

– *திரு கே.எஸ். சிவஞானராஜா* அவர்கள் –

தீராத துன்பங்கள் அனைத்தையும் வேரோடு சாய்த்து, சீரான வாழ்வு மேம்பட, வாராத செல்வங்களை ஆராத இன்பமோடு தருவிக்கும் அற்புதமான பண்டிகையே இன்பம் பொங்கும் இனிய தீபாவளி ஆகும்.

தமிழர் தம் கலாசார பண்பாட்டு விழுமியங்களை எடுத்தியம்பும் தித்திக்கும் திருநாளே தீபாவளி ஆகும்.

ஆழ்மனதிலே மனிதனை ஆட்டிப்படைக்கும் ஆணவ மேலாதிக்க அடக்கும் மனப் பாங்கினை அறவே ஒழிக்கும் ஆனந்த நாளே இத்திருநாளாகும். ஆசையைத் தூண்டிவிடும் அபார சக்தியால் மனிதன் தான் எனும் முனைப்பில் மூழ்கி, வான் பரப்பில் சஞ்சரித்து இறைவனை சற்றும் சிந்தியாது நில்லாதவற்றை நிலையென்றுணரும் புல்லறிவாண்மையை நீக்கி, பொறுப்பான, தலைசிறந்த மனிதனாக்குவதே தீபாவளியாகும்.

சிறுவர் முதல் முதியோர் வரை வயது பேதமின்றி கூடிக்குலாவி, ஆடிப்பாடி, நாடித்தேடி குதூகலிக்கும் நாள் தீபாவளியாகும்.

புத்தம் புதிய புத்தாடை புனைந்து, சித்தம் தெளியுமாறு சிவப்பிரம்ம விஷ்ணு சாம்ராஜ்ஜிய வரங்களை வேண்டி, நீதி நியாய, புராண இதிகாச தேவார, திருவாசக, திவ்ய பிரபந்த, ராம சங்கீர்த்தன பஜன் உருப்படிகளை மனமுருகிப்பாடி, இறை சந்நிதானத்தில் அட்டாங்க பஞ்சாங்க நமஸ்காரம் செய்து, நரகாசுரன் வதம் பற்றிய கதையைக் கேட்டும் படித்தும் உணர்ந்தும் பிறருடன் பகிர்ந்தும் கொண்டாடி, தாய் தந்தையரோடு கூடியிருந்து குலாவி, அளவளாவி, பண்டிகைப் பரிசளித்து, உற்றார், உறவினர், சுற்றத்தவர்களோடு உணவு பலகாரம் பானம் பரிமாறி, உண்டு களித்திருப்பதும் கண்டு ஆனந்திப்பதும், உறவுகளைப் பலப்படுத்துவதும் இந்த தீபாவளிப் பண்டிகையின் சம்பிரதாயமாகும்.

அத்துடன், இருண்ட யுகத்தில் இருந்து வெளிச்சத்திற்கு வருதல் என்பதற்கு அமைய அஞ்ஞானத்திலிருந்து மெஞ்ஞானத்திற்கு வருதல் என்பதே சாராம்சமாகும். ஒவ்வொரு மனிதரிடையேயுள்ள அசுர குணங்களை இல்லாதொழித்து, அவனைத் தவமாக வாழ ஆட்சிப்படுத்துவதே தீபாவளியாகும். வீட்டின் அகப்புற இருளகற்றும் பொருட்டு வரிசையாகத் தீபங்கள் ஏற்றப்பட்டு, ஒவ்வொரு இல்லங்களையும் ஒளிபெறச் செய்வதே தீபாவளிப் பண்டிகையாகும்.

இராமன் பதின்னான்கு வருடங்கள் வனவாசம் முடித்து சீதாவுடன் இலட்சுமணன் சகிதம் நாடு திரும்பியபோது, மக்கள் பிரகாசமாக ஒளிரும்படியாக, தீப விளக்கேற்றி உபசாரமாக வரவேற்ற நாளே தீபாவளியாகும்.

*திறமையும் நம்பிக்கையும் வெல்ல முடியாத படைகள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், பூமாதேவியின் மகனான பௌமன் என்பவன் பிரம்ம விஷ்ணு என்பார்களின் கருணையைப் பெறும் முகமாக இரவு பகல் பாராது கடுந்தவம் புரிந்தான். தவத்தின் பலனாக பிரம்ம விட்டுணு இருவரும் நேரிலே காட்சி கொடுத்தனர். பௌமனிடம் "என்ன வரம் வேண்டும்" என வினாவினர். பௌமனும், "சுவாமி! யான் மரணமின்றியும், எவராலும் அச்சமின்றியும், யாம் எண்ணியது பலிக்கவேண்டும்" என்றும் வேண்டியதன் பிரகாரம், அதன்படி கேட்ட வரம் பெற்றான். காலம் செல்லச் செல்ல, ஆசையும் தன்முனைப்பும் கூடக்கூட, அதிகாரமும் ஆட்சியும் கிடைக்கக் கிடைக்க பெற்ற வரங்களை மறக்க மறக்க மக்களையும் தேவர்களையும் கொடூரமாக வதைக்கவும், வேலை வாங்கவும், அடிமைப் படுத்தவும், அதிகாரம் செய்யவும் துணிந்து உள்ளத்தையும், உடலினையும் காயப்படுத்தினான். இதன் விளைவாக எல்லாம்வல்ல பரம்பொருளிடம் முறையிட்டனர். இதைவிட பெண்களைச் சிறையிலிட்டு அடிமைகளாக வைத்திருந்து வேண்டியபடி வேண்டியவாறு தம் கட்டளைகளை ஏற்குமாறு பணிக்கப்பட்டனர்.

எல்லாவற்றையும் கேட்டுணர்ந்த பரம்பொருள் பிரம்ம விட்டுணுக்களின் உதவியோடு பௌமன் என்றழைக்கப்பட்ட நரக அசுரனைக் கொன்று ஒழித்தபோது, அவனால் வேண்டப் பட்டதும் தன் தவறை உணர்ந்ததுவுமான பரிகார விமோசன நாளே தீபாவளியாகும். மக்களுக்காக, நரகாசுரன் வேண்டிக்கொண்ட வேண்டுதல் இதுவேயாகும்.

சிறுவர்கள், பெண்கள், மூத்தவர்கள் எவரையும் துன்புறுத்தாதீர்கள்.

மற்றவர்கள் நோகும்படியாக எதையுமே ஆற்றாதீர்கள்.

இறைசிந்தனையுடையோரை அவமதிக்காதீர்கள்.

இருக்க இடம், உடுக்க உடை, உண்ண உணவு, உழைக்க ஒரு தொழில் இவையில்லாதபோது மனமிரங்கி உதவி செய்யுங்கள்.

பாலர்கள் சிறுவர்கள் பெண்களுக்கு இறையாசியுடன் எழுத்தறிவியுங்கள்.

நான் எனது என்ற அகங்கார மமதையைவிட்டு, மனிதர்களை வாழ்வாங்கு வாழ அவர்களிடம் உங்களை ஒப்படையுங்கள்.

நிர்வாகத்தினைப் பங்கிட்டுக்கொள்ள வழிவிடுங்கள்.

புலாலுண்பதையும், அப்பிராணிகளைக் கொன்று புசிப்பதையும் நிறுத்தி விடுங்கள்.

வடபுலத்தில் 500 இறைச்சிக்கடைகள் எப்படி வந்தது என்று எமக்குப் புரியவில்லையே!. பஞ்சமா பாதகங்களை வெறுத்து, தூய மனிதராக வாழ ஆசைப்படுங்கள். புலால் சிவபூமிக்கு ஆபத்தானதே! தீபாவளி சிந்திக்குமா?

மேலும் எல்லோரும் விரும்பும்படியாக அறுசுவை உண்டிகளைத் தயார் செய்து, குடும்பம், அயலவர், உறவினர், சுற்றத்தவர்கள், நண்பர்கள், விருந்தினர், அடியவர்கள் எனப் பகிர்ந்துண்டு தீபாவளியினைத் தூய நாளாக்குங்கள்.

சர்க்கரை அமுது, சர்க்கரை அவல், சர்க்கரைப் பயற்றம் பணியாரம், சர்க்கரை மோதகம், சர்க்கரைப் பாயாசம், புளிச்சாதம், பொங்கல், அனுமானங்கள், கார தீர முறுக்குகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சிறுவர்கள் மனங்குளிர தின்பண்டங்களை உண்ணுமாறு இந்நாளைக் களிப்புற வழிசமைத்தல். அத்துடன் அவரவர் வருவாய்க்குத் தக்கபடி புத்தாடைகள் புனைந்தேத்தி புகழ்ந்துபாடி கும்மி கோலாட்டம் நடன நாட்டியம் நாடகம், இசைக்கச்சேரி, கதாப்பிரசங்கம், உபந்நியாசம், நாம பஜன், வாத்திய பிருந்தா, மங்கல வாத்திய இசை ஆகிய நிகழ்வுகளோடு, தீபாவளியைக் கொண்டாடுதல் வாழ்வுக்கு வரம் சேர்ப்பதாகும். இந்த திருநாளில், ஆபத்தான நிகழ்வுகளான கடலில் குளித்தல், நீர் விளையாடுதல், வெடி சுடுதல், வெடி கொளுத்துதல், வேகமாக வாகனமோட்டுதல், கேளிக்கை நிகழ்வுகள், மது அருந்துதல், மரமேறுதல், மின்சார இயந்திர சாதனங்களோடு விளையாடுதல், எல்லைமீறி அவற்றோடு ஈடுபடுதல் இவை யாவும் இந்நாளில் தவிர்க்கப்படுதல் வேண்டும்.

ஐப்பசி மாதத்திலே அமாவாசைக்கு முதல் நாளாகிய சதுர்த்தசி பொருந்திய விடியற் புறநேரமே தீபாவளிக் காலமாகும்.

12.11. 2023 ஞாயிற்றுக்கிழமையன்று வருவதனால் குடும்பங்கள் விடுமுறையோடு மிகவும் பிரம்மாதமாகக் கொண்டாட முடிகின்றது. ஆலயங்கள் யாவும் அடியார்களுக்காக அகலத் திறந்து அருள் பாலிக்கத் தீபாவளித் திருநாள் வழமைபோல களைகட்டியுள்ளது.

"இன மத மொழி கடந்து எல்லோரும்
மன மது நெகிழுமாறு மகிழ்ந்திருப்பர்,
சின மது கொள்ளாமல் சித்திர வாழ்வுபெற
அனைவரும் சமனென்று ஆடி ப்பாடுவோம்"

அனைவரும் ஆனந்த வெள்ளத்தில் திளைத்திட ஒரு தித்திக்கும் பண்டிகை. வாழ்த்துமடல் அனுப்புதல் என்பது ஒரு பிரதானமான பண்டிகை நிகழ்வாகும். அதிலேயும் தீபாவளி வாழ்த்துமடல் அனுப்புவதும் கீறுவதும் இரசிப்பதும் பெரிய கைங்கரியமாகும். அல்லாமலும் இது எல்லோர்க்குமான ஒரு நற்செய்தியாகும்.

தீபாவளிக்கான செய்தியோடு நாமும் இணைவோமாக.

எல்லோரும் கொண்டாடுவோம்
எம்மவர் பேதங்கள் யாவுமகன்றிட
எல்லோரும் கொண்டாடுவோம்.

பொல்லாத தீவினைப் பொடிப்பொடியாகிட
போகுமே துன்பங்கள் பூமகள் மகிழ்ந்திட
எல்லோரும் கொண்டாடுவோம்.

இல்லாத பொருளுக்கு ஆசைகொள்ளாது
இருக்கின்ற பொருளில் எல்லாமே உண்டுஎன்று
எல்லோரும் கொண்டாடுவோம்.

வல்லோரும் நல்லோரும் வரமாகவேண்டும்
வாராத செல்வங்கள் இங்கு பேறாகுமென்று
எல்லோரும் கொண்டாடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லாகிப் பூடாகி பூமியெங்கும் மரமாகி
பூத்திட வேண்டுமே பச்சைப் பசேலென்று
எல்லோரும் கொண்டாடுவோம்.

பல்லுயிர் ஓம்பியே புண்ணியம் ஓங்கிட
பாரெல்லாம் பஞ்சம் பசி பட்டினி நீங்கிட
எல்லோரும் கொண்டாடுவோம்.

## துதிப்போர்க்கு தோகைமயில் வேலன் துணை

முருகா வெனக்குரல் கேட்க மறவா
தருள்வான் ஓடியே வந்து - ஒருகரத்தில்
வேல்தாங்கும் அற்புத வேலனே உன்மலர்க்
கால்பணிந் தோம்கருணை காட்டு.

கண்ணே மணியே கதிர்வேல் முருகனே
பண்ணே பரம்பொருள் மைந்தனே - எண்ணுகின்ற
போதெல்லாம் எம்முள் புகுந்து எமக்கொரு
தீதென்றும் வாராமல் பார்.

குதித்தாடும் தோகைமயில் வேலனின் வேலை
துதிப்பார்க்கு துணை நிற்பான் - மதிகெட்டு
மாநிலத்தில் லுன்னை மறந்திடா தெப்பொழுதும்
நானிருப் பேனென்னை நம்பு.

அவதார மைந்தனாய் சந்நிதியில் தோன்றி
பவளவிழாக் கண்ட சுவாமி - உவப்பால்
அறப்பணி ஆற்றும் முருகனின் அன்பரை
மறவாது வாழ்த்து மிகுந்து.

-சீ. சாந்தநாதன்-

## குருபூஜை தினங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நவ | 01 | ஐப் | 15 | வெள்ளி | மெய்கண்டதேவர் |
| நவ | 14 | ஐப் | 28 | வியாழன் | திருமூலர் |
| நவ | 23 | கார் | 08 | சனி | ஆறுமுகநாவலர் |
| நவ | 25 | கார் | 10 | திங்கள் | மெய்ப்பொருளார் |
| டிச | 06 | கார் | 21 | வெள்ளி | இராமநாதர் |

*தீய பண்பினைத் திருத்திடும் கல்வி நல்ல பண்பை பொலிவுறச் செய்யும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவத்கீதையின் தத்துவம்

## அத்தியாயம் - 14

(தொடர்ச்சி...

## கடவுளின் புகழும் பெருமையும்

*– திரு பூ. சோதிநாதன்* அவர்கள் –

### 08) சிந்தனைக்கு அடங்காதது

எங்கும் எல்லா வேளையிலும் கடவுள் இருப்பதனால் இந்த வகையில் கடவுளின் செயல் நடைபெற்று வருகிறது. அவர் குறித்த ஓர் இடத்துக்கும், காலத்துக்கும் மட்டுமன்றிக் காலமும் இடமும் இல்லாத நிலையில் இருந்தும் செயலாற்றக்கூடியவர். எனவே, அவர் பிரயாணம் செய்யவேண்டிய தேவை இல்லாதவர். இதுதான் கடவுளுடைய செயலுக்கும் மனிதனுடைய செயலுக்கும் இடையே உள்ள வித்தியாசம். கடவுள் செயலாற்றும் பிரமாண்டமான முறையை "உடனடியாகச் செயலாற்றுவது" என்ற வார்த்தைகளில் கூறினால் கூட முற்றும் சரியாக இருக்காது. எமது மொழியில் காலம், இடம் தொடர்பான எண்ணக் கருத்துக்களே அநேகம் உள்ளன. எமது மனங்களில் நாம் வைத்திருக்கும் மிக உயர்ந்த கருத்தும்கூட. கால, இட அடிப்படையால் தளைப்பட்டதாகவே இருக்கிறது. அது கடவுளை அவர் உள்ளவாறே சிந்திக்க விடுவதில்லை. நம்மால் அவரை நமது ஆற்றலுக்கு ஏற்றவாறு ஓர் எல்லைக்குள் மட்டுப்படுத்தியே சிந்திக்க முடியும். ஆனால் கடவுளின் உண்மையான புகழ் எமது புரிந்துகொள்ளும் அளவுக்கு உட்படாது அப்பாலும் உள்ளது.

### 09) விபூதிகள்

கீதையின் ஒன்பதாவது அத்தியாயத்தில் கடவுளது பிரசன்னம் எல்லாம் உயர்ந்த மேன்மையான வடிவங்களிலும் மிகவும் புகழ்வாய்ந்தனவாய் உதாரணங்களோடு விவரிக்கப் பெறுகிறது. அறிவோ ஆற்றலோ மிக உயர்ந்ததாக உள்ள எதுவும் செயலாற்றும் முறையைப் பொறுத்தவரையில் அதி மானிடத்தன்மை வாய்ந்தது. இதனால், எதுவும் கடவுளின் ஓர் ஆற்றல் அல்லது வெளிப்பாடு எனக் கருதவேண்டும். மனிதனின் புரிந்துகொள்ளும் தன்மைக்கும், ஆற்றலுக்கும் அப்பாற்பட்ட விடயங்கள் பல இவ்வுலகில் இருக்கின்றன. அவற்றை ஓரளவு ஒவ்வொருவரும் அறிவார்கள். இயற்கை விதிகள் அதி மானிடத்தன்மையோடுதான் செயற்பட்டுக் கொண்டு இருக்கின்றன. மனிதனது அறிவுக்கும் அவனது கட்டுப்பாட்டுக்கும் அப்பாற்பட்ட சக்திகளின் இருப்பைப் பற்றிக் கூறும் பல சம்பவங்கள் இவ்வுலகில் தாமாகவே நிகழ்ந்து கொண்டு இருக்கின்றன. எல்லையற்ற இந்தப் பெருமையும் புகழும் உடைய எல்லா மேன்மைகளும் கடவுளின் விபூதிகளாகும். அவை கடவுளின் எல்லையற்ற பெருமையைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டும் வெளிப்பாடுகளாம். கடவுள் மிக உயர்ந்த புகழும் பெருமையும் உடையவர். அத்துடன், அவர் மகிழ்ச்சியையும் பேரானந்தத்தையும் உடையவரும் ஆவர். அப்பெருமையையும் புகழையும் கூறும் ஒவ்வொன்றையும் எண்ணுகின்ற அக்கணமே நாமும் அந்த மகிழ்ச்சியையும் பேரானந்தத்தையும் அடைவோம்.

## 10) காந்த சக்தி

ஆன்மா தனக்குள் இருந்து எழுச்சிபெறும் எதனையும் கடவுளின் ஒரு வெளிப்பாடாகக் கருதலாம். இந்த உலகில் கூடப் பல விடயங்கள் எமது ஆன்மாக்களைத் தூண்டக் கூடியனவாய் இருக்கின்றன. அவற்றின்மூலம் எமது முழு இருப்பும் செயலுக்குள் ஊக்கப் படுத்தப் பெறுவதாகவே தோன்றுகிறது. நாம் அவற்றைப் புத்திபூர்வமானவை என்றோ, மனங்களில் உணரப்படுவன என்றோ எண்ணுவதில்லை. அவ்வேளைகளில் நாம் எமது வரையறைகளுக்கும் மேலாக எடுத்துச் சொல்லப்படுவதாக உணர்கிறோம். அவை எமது உடல், மனம் என்பவற்றின் எல்லைகளில் இருந்து எம்மை விடுவிப்பனவாகஅமைகின்றன. மிக அருமையாகவே நாம் அவ்வாறான அனுபவங்களைப் பெறுகின்றோம். எல்லையற்ற துன்பத்திலும், ஆனந்தத்திலும் அவ்வகையான திருப்தியை நாம் பெறுகின்றோம். அவை எமது உடல் உள எல்லைகளைக் கடந்தவையாக இருக்கின்றன. கடவுள் எங்களை அணுகியதும் நாம் மனிதர்கள் என்ற நிலையில் இருந்து நீங்கிவிடுகின்றோம். அவ்வேளையில் நாம் மனம் உள்ளவர்கள் என்றோ, விவேகிகள் என்றோ எண்ணுவதில்லை. அத்துடன் கடவுளின் புகழினால் நாம் காந்தசக்தி நிறைந்தவர்களாக மாறும்போது அந்நிலையை மொழியைக்கொண்டு விவரிப்பது சாத்தியமற்றதே.

## 11) கடவுள் வெளிப்பாடு

மொழியைக் கடந்த நிலையில் நாம் அதிஉயர்ந்த, நலன் மிகுந்தவர்கள் போலச் சூனியத்தில் கரைந்து மறைந்துவிடுவோம். அவ்வாறு அநுபவங்களுக்கு ஊடாகச் செல்லாதவர்களுக்கு அந்தப் பேரின்பநிலை பொருளற்ற வெறும் வார்த்தைகளாகவே இருக்கும். அவர்கள் அந்த வார்த்தைகளுக்கு இலக்கணப்படி அகராதி அர்த்தத்தையே கொள்ள முடியும். ஆனால், ஆன்மா செயல்படவில்லை என்றால் அந்நிலையில் உயிர்த்துடிப்பு இருக்காது. கடவுள் பிரபஞ்சத்தின் ஆன்மாவாக இருப்பதனால் ஆன்மா விழிப்புணர்வுடன் இருக்குமட்டுமே கடவுள் பிரசன்னமாகி இருப்பார். ஆன்மா பேசும்போது அது கடவுளை வரவழைப்பதாக இருக்கும். இந்த உலகில்கூட அவ்வாறான புகழ்களைக் காணலாம். எங்களை அதிரச் செய்யும் ஆச்சரியங்கள், புதிர்கள் என்பன முழுமையாகக் கவர்ந்து உயர்நிலையைக் காட்டும் பெரிய அவதாரங்கள், முனிவர்கள், ரிஷிகள், ஞானிகள் பல்வேறு தோற்றப்பாடுகள் முதலானவற்றில் இருந்து எமது கண்களை நாம் திருப்பி எடுத்துக்கொள்ள முடியாது. அவை தமக்குள்ளே எங்களை முழுமையாக மூழ்கும்படி செய்துவிடுகின்றன. அவற்றில் ஒவ்வொன்றும் கடவுளின் வெளிப்பாட்டினது ஒரு கதிர் ஆகும். இவற்றை எல்லாம் நாம் கேள்விப்படும்போது எமக்கு என்ன கூறுவதென்றும், எமது மனங்களில் எதை எண்ணுவதென்றும் தெரிவதில்லை.

*வாலிபத்தைக் கட்டுப்படுத்தினால் வயோதிபம் தானே கட்டுப்படும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 12) விடுப்பு உணர்வு

படைப்புக்குப் பின்னாலுள்ள இப் புகழையும், புதிரையும் கண்டு மயங்கி நிற்கிறோம். இந்நிலையை விளக்க எமக்கு மதிமயக்கம் என்ற வார்த்தை மட்டுமே உள்ளது. எமது அந்நிலையை விவரிக்க வேறு வார்த்தைகள் எவையும் இல்லை. அப்பொழுது எமது மனங்கள் சிந்திப்பதனை நிறுத்திவிடுகின்றன; எமது உணர்வுகள் செயற்படாமல் போகின்றன. அப்பொழுது நாம் உயிரோடு இருக்கிறோமா இல்லையா என்றும் தெரிவதில்லை. நாம் கடவுளின் காட்சிக்காக எம்மைத் தயார் செய்யும்போது அப்படியான ஒரு நிலைக்குள் சென்று விடுகிறோம். இத் தெய்வப்புகழின் விபரம் ஒன்பதாம், பத்தாம் அதிகாரங்களில் எமக்குத் தரப்பெறுகின்றன. இப்புகழ்கள் அர்ச்சுனனது ஆவல்களின் ஆழத்தில் ஒரு விடுப்பறியும் உணர்வை ஏற்படுத்தி விடுகின்றன. இதனால், அவன்தான் அந்தப் புகழின் காட்சியைக் காண முடியுமா என எண்ணி ஆச்சரியம் அடைகிறான். இந்த இடத்தில்தான் கீதையின் பதினோராம் அத்தியாயம் ஆரம்பிக்கிறது.

### 13) நேரடி அநுபவம்

மாபெரும் போதகரான கிருஷ்ணனுக்கு முன் நிற்கும் அர்ச்சுனன் அவரிடம் பின்வருமாறு கேட்கிறான்: "இந்த வகையில் எம்மைப் பிரமிப்படையச் செய்யும் அப்புகழ்களினால் நீர் எதைக் கருதுகின்றீர்? இந்தப் பெருமைக்கு உரியவர் யார்? இத் தெய்வீகப் புகழின் அநுபவத்தை நாம் எவ்வாறு அடையமுடியும்? என்னைப் போன்ற ஒருவனுக்கு இந்தப் புகழின் காட்சியைக் காண்பது சாத்தியமா? இதுவரை நேரமும் நீங்கள் விவரித்துவந்த அவை எல்லாவற்றினதும் நேரடி அநுபவத்தை என்னால் அநுபவிக்க முடியுமா?" தன்னை முழுமையாக அந்தப் பெரிய அவதாரத்துக்குச் சரணடைந்து, சீடன் பின்வருமாறு பேசலானான்.

"இந்தப் புகழின் ஒரு காட்சியை நான் காணத் தகுதி உள்ளவன் என நீங்கள் கருதினால் அந்த அருளை எனக்குத் தருவீர்களா? அதற்கு என்னிடம் கருணை புரிவீர்களா?" கீதையின் பதினோராவது அத்தியாயத்தில் அர்ச்சுனனுக்கு வெளிப்படுத்திய அத் தோற்றப் பாட்டை மயிர்க்கூச்செறியும் மொழியில் வெளியிடப்பெற்றிருப்பதைக் காணலாம். இந்த உலகில் வார்த்தைகளைவிட வேறு எக் கருவிகளும் இல்லாத காரணத்தால் அந்தப் புகழை வெளிப்படுத்தக் கீதைக்கு வார்த்தைகள் வேண்டியிருந்தன. இதனால் எல்லா விளக்கங்களும் வார்த்தைகளின் மூலம் தரப்படுகின்றன. எனவே மிக உயர்ந்த கல்வி வல்லவன்கூட புலக் காட்சியின் உலகைச் சார்ந்த படிமங்களையே பயன்படுத்தவேண்டி இருக்கிறது.

### 14) ஒளி

நாம் கடவுளைப்பற்றி ஒளி என்று பேசுகின்றோம். ஆனால், சூரியனின் ஒளியைக் காட்டிலும் ஒரு பெரிய ஒளியை எம்மால் கற்பனை செய்ய முடியாது. எம்மைப் பொறுத்த வரையில் சூரியஒளிதான் மிக மேலான ஒளியாகும். கடவுள் எல்லாவற்றையும் அடக்கி, அதற்கு அப்பால் எல்லையற்றவராயும் இருந்தபோதும், அதுபோன்ற படிமங்கள், ஒப்பீடுகள் மூலம்தான் அவரது புகழை விளக்கமுடியும். ஆயிரக்கணக்கான சூரியர்கள் ஒரே நேரத்தில் ஆகாயத்தில் உதயமாவதைக் கற்பனை செய்து பாருங்கள். பார்ப்பவரின் கண்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை கூசச்செய்யும். ஒரே தடவையில் ஆயிரக்கணக்கான சூரியர்களின் ஒளியை எப்படிப் பார்ப்பதென்று ஒருவரும் தனது வாழ்நாளில் கண்டிருக்கமாட்டார்கள். மீண்டும் இவை எங்களுக்கு வெறும் அர்த்தமற்ற சொற்களாகவே இருக்கின்றன. கிழக்குத் திசையில் ஆயிரக் கணக்கான சூரியன்கள் ஒன்றுகூடிப் பிரகாசிப்பதை எவ்வாறு பார்க்க வேண்டும் என்று எங்களால் கனவு காணக்கூட முடியாது. அது எதுவென்று நாம் புரிந்து கொள்ளுவதற்குச் சிந்திப்பதன்மூலம் எங்களைச் சமாதானப்படுத்தத்தான் எங்களால் முடியும். (தொடரும்...

---

**உண்மை, நேர்மை, உழைப்பு, தொண்டு, அறப்பணி என்பவற்றிலே சிகரம் தொட்டு வாழும் வணக்கத்திற்குரிய கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமிகள் அவர்களை அவர்களது எழுபத்தைந்தாவது (75) அகவையில் கால்பதித்து பவளவிழாக் கண்டபோது அவரைப் போற்றிப் பாராட்டி வாழ்த்திக் கௌரவித்து வணங்கி வழங்கும் வாழ்த்துப் பாமாலை**

மனிதரைக் கடவுளாய் மதிக்கின்ற மாந்தருள்
புனிதம் பூத்ததோர் மனிதராய் வாழ்ந்து
கனிவோடு காலத்தால் கடமைபல செய்யும்
இனியவர் நம்மோகன் சுவாமிகள் வாழி!

கடவுளிடம் கேட்பதைத் தன்கரத்தால் தந்து
நடமாடும் கடவுளாக நாளெல்லாம் வாழ்ந்து
திடமான பலபணியும் தினந்தினம் செய்யும்
உடலினார் நம்மோகன் சுவாமிகள் வாழி!

அறப்பணிகள் செய்வதிலே சிகரம் தொட்டு
சிறப்புடனே செயலாற்றும் சிந்தையுடன் வாழ்ந்து
திறம்படவே திருத்தொண்டைத் தினந்தினம் செய்யும்
பிறப்பிலுயர் நம்மோகன் சுவாமிகள் வாழி!

மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவையென்று
வக்கற்றோர் வகையற்றோர் மனங்களிலே வாழ்ந்து
திக்கெட்டும் போற்றிடவே மகேஸ்வர பூசைசெய்யும்
பக்குவத்தார் நம்மோகன் சுவாமிகள் வாழி!

கல்விக்காய் கலைகளுக்காய் வாரிவாரிக் கொடுத்து
அல்லலுறும் நோய்நொடியார் மீட்சிபெற வாழ்ந்து
சொல்லிலும் செயலிலும் நல்லதையே செய்யும்
வல்லவனார் நம்மோகன் சுவாமிகள் வாழி!

அகவை எழுபத்தைந்தில் ஏற்றமுறத் தடம்பதித்து
பகலிரவாய்ப் பணிசெய்யும் நோக்குடனே வாழ்ந்து
சகமனிதர் சுகம்காண தியாகம்பல செய்யும்
தகவுடையார் நம்மோகன் சுவாமிகள் வாழி! வாழி!

-ஆசுகவி-

*நற்செயல் என்றும் நிலைத்திருக்கும். வீண்போவதில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகத்தில் வெண்பா

– **திரு முருகவே பரமநாதன்** அவர்கள் –

தமிழில் எழுந்த இலக்கியச் செல்வங்கள் பல்துறை சார்ந்தவை. இவைகள் எல்லாமே கவிதை வடிவங்களே. இத்துறையில் எழுந்த பக்தி இலக்கியங்கள் சிறப்பானவை. பக்தி இலக்கியப்பரப்பின் வரலாறு பிற்காலத்தில் தீட்டப்பட்டுள்ளது. அவை பல்லவர் காலம் பக்தி இலக்கிய காலம் எனப் பகர்வன. இவை தோத்திரமாயும், சாத்திரமாயும், நாட்டார் இலக்கியமாயும், கீர்த்தனங்களாயும், மெல்லிசைப் பாடல்களாயும் காலத்துக்குக் காலம் மலர்ந்துள்ளன. பிள்ளைத்தமிழ்கள், தலபுராணங்கள் போல்வனவும் இவற்றுள் அமையும். இன்றைய திரையிசையிலும் இப்பகுதி இடம்பெற்றிருக்கக் காணலாம். பண் சுவறிய தோத்திரங் கள் இறைபுகழ் பேசுவனவே. வைணவ சமயிகளும், சைவ சமயிகளும் இவற்றிலே மிக்க ஈடுபாடு உடையர். இச் செய்யுள் மரபு இன்றும் நிலைத்து நிலவக் காணலாம். எல்லாரும் கவி எழுதலாம் என்ற இன்றைய மாற்றத்திலும், மரபுச் செய்யுள் வழி பல பெரும் நூல்கள் எழுந்து கொண்டிருக்கின்றன. பன்னிரு சைவத் திருமுறைகள் சைவத்திற்கும், பன்னிரு ஆழ்வார்கள் அருளிச் செயல்கள் வைணவர்க்கும் உயிர் போன்றவை. சைவ தோத்திரங்களின் முன்னோடியாகக் காரைக்காலம்மையார் திகழ்கின்றார். அவர் அருளிய பிரபந்தங்கள் மூன்று.

01. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்
02. திருவிரட்டை மணிமாலை
03. அற்புதத் திருவந்தாதி

இவை மூன்றும் பதினோராந் திருமுறையில் அமைந்துள்ளன. அற்புதத் திருவந்தாதி, வெண்பா யாப்பால் இயன்றது. பெயருக்கேற்றபடி அற்புதமான படைப்புத்தான் அற்புதத் திரு அந்தாதி. ஒரு பாடலை மட்டும் பார்ப்போம்.

ஒருபால் உலகளந்த மாயவனாம் மற்றை
ஒருபால் உமையவளாம் என்றால் - இருபாலும்
நின்னுருவ மாக நிறந்தெரிய மாட்டோமால்
நின்னுருவோ மின்னுருவோ நேர்ந்து.

-அற்புதத் திருஅந்தாதி 41.

வெண்பாவிற் புகழேந்தி. என்கிறது ஒரு தனிப்பாடல். நேரிசை வெண்பா இன்னிசை வெண்பா எனப் பல இனச் செய்யுள் தமிழில் அமைந்துள்ளன. இம் மரபு வழி பல இலக்கியங்கள் வடிக்கப்பட்டுள்ளன. வெண்பா இலக்கியப் பட்டறையில் வார்ப்பது இலகுவன்று. வெண்பாவுக்கே தனித்துவமாய் அமைந்த ஏடுகள் உயர்ந்தன. சிதம்பர வெண்பா. நெஞ்சறி விளக்கம், சகுந்தலை வெண்பா எனப் பல உண்டு. நமது மண்ணின் மைந்தர் புலவர்மணி இயற்றிய பகவத்கீதை வெண்பாவால் ஆனது. மேலாந் தரமுடையது. நளவெண்பா புகழேந்தியின் படைப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வரிசையிலே பல செய்யுள் மரபு பேணப்படும் திருவாசகப் பெருநூலில் மூன்று பதிகங்களில் செய்யுள் (வடிவம்) வெண்பா யாப்பால் அமைந்துள்ளன. அவையாவன,

திருத்தசாங்கம் (10) பாடல்கள்
திருவெண்பா (11) பாடல்கள்
பண்டாய நான்மறை (07) பாடல்கள்

எல்லாம் நேரிசை வெண்பாக்கள். நாற்பத்தேழாம் பதிகத் திருநாமமே திருவெண்பா வெனக் காணப்படுகிறது. பிற்காலத்து எழுந்த நீதிநூற் கொத்துக்கள் பெரும்பாலும் வெண்பாவால் ஆனவையே. திருவாசகம் படிப்போரை, படித்தோரை இப்பதிகங்கள் கவராமல் இருக்கவே முடியாது. இனிமையானவை, எளிமையானவை, இலகுவானவை, தெளிவானவை, மொழிக்கு மொழி தித்திப்பவை, பொருள் பொதிந்தவை, ஆழமானவை, அழகானவை, மனனஞ்செய்ய இலகுவானவை, படிப்போரின் மனங்கரைத்து கண்ணீர் சொரிய வைப்பவை.

தசம் என்றால் பத்து என்று பொருள். அங்கம்- அவயம், கூறு, அமைப்பு. ஒரு மன்னனுக்குப் பத்து அம்சங்கள் இருக்கும். அந்த இயல்புகள் இறைவற்கு இறைவனாம் ஈசனுக்கும் அமையும். அவை பெயர், நாடு, ஊர், ஆறு, மலை, குதிரை, படை, முரசு, மாலை, கொடி என்பன. இறைவனின் பத்து மகிமைகள் இப்பதிகத்திற் பேசப்படுகின்றன. கிளியை விளித்திட (முன்நிறுத்தி) இப் பதிகம் நெய்யப்பட்டுள்ளது. இந்தக் கிளிப்பிள்கைளை அழைக்கும் பாணி, பாவம் நிறைந்தது. இலக்கிய நயம் கொழிப்பது.

ஏரார் இளங்கிளியே, ஏதமிலா இன்சொல் மரகதமே தாதாகு பூஞ்சோலைத் தத்தாய், செய்யவாய்ப் பைஞ்சிறகிற் செல்வீ திஞ்சகவாய் அஞ்சுகமே, கோற்றேன் மொழிக்கிள்ளாய், இன்பான் மொழிக் கிள்ளாய், ஆயமொழிக்கிள்ளாய், சோலைப் பசுங்கிளியே.

ஏர் ஆர்- அழகுபொருந்திய, மரகதமே- பச்சைமணி போன்ற கிளியே. தாது- மகரந்தம், தத்தாய்- கிளியே, செல்வீ- கிளியே, பைஞ்சிறகு- பசிய செட்டை, கிஞ்சுகம்- முருக்கம்பூ, அஞ்சுகம்- கிளி, கோல்+தேன்= கோற்றேன்- கொம்புத்தேன், ஆயமொழி- ஆராய்ந்த மொழி.

சைவசமயிகளின் அடையாளமாயும், சிவபெருமானது கொடியாயும் அமைந்த இடபம் பொறித்த கொடி பற்றிய வாசகம் இது.

சோலைப் பசுங்கிளியே தூநீர்ப் பெருந்துறைக்கோன்
கோலம் பொடியும் கொடி கூறாய் - சாலவும்
ஏதிலார் துண்ணென்ன மேல் விளங்கி ஏர்காட்டும்
கோதிலா ஏறாம் கொடி.

ஏறு- இடபம், நந்தி. -திருத்தசாங்கம் 10.

இன்று நாடுதோறும் தேசியக் கொடி பட்டொளிவிட்டுப் பறக்கக் காணலாம். மகாகவி பாரதி தாயின் மணிக்கொடியைக் கவி செய்துள்ளார்.

தாயின் மணிக்கொடி பாரீர் - அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்
ஓங்கி வளர்ந்தோர் கம்பம் - அதன்
உச்சியின்மேல் "வந்தே மாதரம்" என்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாங்கின் எழுதித் திகழும் - செய்ய
பட்டொளி வீசிப் பறந்தது - பாரீர்

-பாரதி பாடல் தாயின் மணிக்கொடி 14-1.

சைவசமயம் பிறவியைப் பற்றிய கொள்கையில் இறுக்கமானது. பிறவியைப் பெருங்கடலாகக் காட்டி- அதைக் கடக்க இறைவன் திருவடிகளே தெப்பம் என்று பேசினார் வள்ளுவர்.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.

-திருக்குறள் 10.

(உலகியல்பை நினையாது இறைவனடியே நினைப்பார்க்குப் பிறவி அறுதலும், அவ்வாறன்றி, மாறி நினைப்பார்க்கு அஃதருமையுமாகிய இரண்டும் இதனால் நியமிக்கப்பட்டன- பரிமேலழகர்)

பிறப்புக்களில் மேதகு பிறவி மனிதமென்றும், அது பிறப்பறுக்க வந்த பிறவியென்றும் சொல்லப்படுகிறது. எனினும் பிறவி ஒன்று இல்லை என்ற கருதுகோள் இருந்திருக்குமாயின் எத்தனையோ சடங்குகளில் இருந்து தப்பியும் இருப்பான். மகிழ்ச்சியுடன் வாழவும் அது வழிகாட்டலாம். மோட்சம், நரகம் வந்ததால் ஈமச்சடங்கில் இருந்து மோட்சார்ச்சனைவரை அலையவும் தேவையிராது. எனினும் கடவுளும், சைவமும் நம்பிக்கையின் கட்டுமானம். எனவே பிறவியை வேறுக்கும் பெம்மானை வேண்டி வணங்கி, பாவச்சுமைகளின்றும் விடு பட்டு உய்திகரண வழிகாட்டும் (திருவாசகத்தில் 47ஆம் பதிகம்) திருவெண்பா, பண்டாய நான்மறை நமக்கு இடித்துக் கூறுவது என்ன என்பதை இனிச் சிந்திப்போம். பிறவியுந் துயரமானதுதான். பிறவி எடுத்து வாழும் மனிதவாழ்வும் துன்பமயமானதுதான். எனினும் புத்தர் சொன்னபடி துக்கநீக்கம் முக்கியம். இந்தத் துயரில் இருந்தும் விடுபட்டு பிறவியினின்றும் கடைத்தேற ஒரு மருந்து வைத்தியநாதன் சிவன்தான் என்கிறார் வாதவூரர்.

முன்னை வினையிரண்டும் வேரறுத்து முன்னின்றான்
பின்னைப் பிறப்பறுக்கும் பேராளன் - தென்னன்
பெருந்துறையின் மேய பெருங் கருணையாளன்
பெருந் துயரந் தீர்க்கும் மருந்து.

-திருவெண்பா 4.

அவரவர் அனுபவம்- தாம் தாம் செய்த வினை, தாம் தாம் அனுபவிப்பர். நம்மைப் பற்றிப் படர்வன புண்ணிய பாவங்களே. எனவே நன்மைவழி நம் வாழ்வு தொடரவேண்டும். புண்ணியம் ஆம்- புண்ணியம் செய்ய வேண்டுவது. பாவம் போம்- பாவம் தவிர்க்க வேண்டியன. ஆக வினைப்பயன் இருக்கும்வரை இன்ப துன்பம் உண்டு. எனவே தீதொழிய நன்மை செய்யவேண்டியவன் மனிதன்தான். இப்பிறப்பையும் வென்று சுவர்க்கம் புகுந்தாலும் நிரந்தர மகிழ்ச்சி காண இறைவன் ஒருவனே மருந்து என்ற உண்மையை உணர்ந்து நாமென்றும் வழிநடக்க வேண்டும். வழிநடத்தவும் வேண்டும். இதையே வள்ளலார் அருமருந்தொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமருந்து எனக் குறிப்பிடுகிறார். எனவே குருந்தமர நீழலில் இருந்து, என்னை ஆட்கொண்ட பெருமானை, ஓரிடத்தில் அமைதியாய் இருந்து, வேறு சிந்தனையின்றி அவனடியையே இறைஞ்சி இரப்பாய் மனமே! அப்போ அவன் தீரா வினைகளைத் தீர்க்கும் மருந்தாகவே வந்து உன் நெஞ்சிலே குடியிருப்பார் என்கிறார் மணிவாசகர்.

இருந்தென்னை ஆண்டான் இணையடியே சிந்தித்து
இருந்து இரந்து கொள் நெஞ்சே எல்லாம் - தரும்காண்
பெருந்துறையின் மேய பெருங்கருணை யாளன்
மருந்துருவாய் என்மனத்தே வந்து.

-திருவெண்பா 10.

அடுத்த பாடலிலே- இன்பத்தைத் தந்து- மன இருளை நீக்கி- எப்பொழுதும் துன்பத்தை அடித்து வெருட்டும் ஒளியாகி- அன்பைச் சொரிந்து, சிறப்புமிகு திருப்பெருந் துறையில் கோயில் கொண்ட சிவன்- என்னுடைய மனத்தையே விரும்பி இருப்பிடமாகக் கொண்டான் என (இறந்தகாலத்தின்) பாடுகின்றார்.

இன்பம் பெருக்கி இருளகற்றி எஞ்ஞான்றும்
துன்பம் தொடர்வறுத்துச் சோதியாய் - அன்பமைத்துச்
சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊராகக் கொண்டான் உவந்து.

-மேலது 11.

"அறிவால் அறிந்துன் இருதாள் இறைஞ்சும் அடியார் இடைஞ்சல் களைவோனே" என்பது அருணகிரியார் வாக்கு. இரந்திரந்து உருக என்மனத்துள்ளே எழுகின்ற சோதியே போன்று எனப் பாடினார் இன்னோர் இடத்தும். அடுத்த பதிகத்திலே ஆணவம், கன்மம், மாயை என்கின்ற மும்மலம் இல்லாமற் போக, தேனான் சிவன் குதிரையில் ஏறி பெருந்துறை யுறை அடைந்தான். அவனை வாழ்த்தி வணங்குங்கள். அப்படிச் செய்வீர்களாயின் பிறவியின் வேரே இல்லாமற்போம் என்கிறார்.

உள்ள மலமூன்றும் மாய உகு பெருந்தேன்
வெள்ளந் தரும்பரியின்மேல் வந்த வள்ளல்
மருவும் பெருந்துறையை வாழ்த்துமின்கள் வாழ்த்தக்
கருவும் கெடும் பிறவிக் காடு.

-பண்டாய நான்மறை 2.

சிவஞானம் என்னுந் தேனை சிவன் நல்கியருள்கின்றான். அதன் விளைவாக மும்மலங்கள் அழிகின்றன. பிறவிக்காடு வேரோடு அழிந்து போகின்றது.

-சித்பவானந்தர்.

காட்டகத்து வேடன் கடலில் வலைவாணன்
நாட்டிற் பரிபாகன் நம்வினையை - வீட்டி
அருளும் பெருந்துறையான் அம்கமலபாதம்
மருளுங் கெடநெஞ்சே வாழ்த்து.

-பண்டாய நான்மறை 3.

*உன் பணியை முடிந்தவரை சிறப்பாகச் செய்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமான் அடியார்களுக்கு எளியவன். அர்ச்சுனனுக்காகச் சிவன் காட்டிலே வேடனாக வந்தான். கடலிலே மீனவனாக வந்தான். நாட்டிலே (மதுரையில்) எனக்காகக் குதிரைச் சேவகனாக வந்தான். அவனை வாயாரப் பாடி கண்ணிலே கண்டு, நெஞ்சிலே நினைந்து வணங்கினால் வினையும் அறியாமையும் இல்லாமற் போகும் என்பது ஆளுடை அடிகள் திருவாக்கு. எனவே பேசுகைக்கு எட்டாத பரம்பொருளின் பெருமை பேசிப் பிறப் பறுக்க இறைவனாகிய அமிர்தத்தை மனத்தில் மருந்தாக இருத்துவோம்.

பேசும் பொருளுக்கு இலக்கிதமாம் பேச்சிறந்த
மாசின் மணியின் மணிவார்த்தை - பேசிப்
பெருந்துறையே யென்று பிறப்பறுத்தே நல்ல
மருந்தினடி என்மனத்தே வைத்து. -பண்டாய நான்மறை 7.

காலமெல்லாங் கலங்கி வாழும் மனித மனம் அமைதிகாண இவ்வெண்பாக்கள் நல்ல மருந்தாம், நாம் உண்ணும்போதும் உறங்கி விழிக்கும்போதும் எப்போதும் அவனுக்கு நன்றி கூறுவோமாக.

யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையான்
யாவர்க்கும் கீழாம் அடியேனை - யாவரும்
பெற்றறியா இன்பத்துள் வைத்தாங்கு என் எம்பெருமான்
மற்றறியும் செய்யும் வகை.

---

## தாயைப்போல் தயை புரிவாய்

**பல்லவி**

*நீயிருக்கும் இடம் நாடி நான் வருவேன்! - முருகா*
*நின்னையே தினம் பாடி நான் துதிப்பேன்!* (நீயிருக்கும்)

**அனுபல்லவி**

*தாயினைப் போல வந்து தயை புரிவாய்!*
*தமிழாலே உனைப் பாட அருள் தருவாய்!* (நீயிருக்கும்)

**சரணம்**

*ஆற்றங் கரையினிலே அமர்ந்திருப்பாய்! அந்த*
*அலை மோதுங் கடலருகே கோவில் கொண்டாய்!*
*போற்றித் துதிப்போர்க்கு புகழிடமும் கொடுப்பாய்!*
*புண்ணியனே! சந்நிதியில் புதுமைகளும் புரிவாய்!*
(நீயிருக்கும்)

*உன் திருப் புகழ்பாடி உளம் மகிழ்வேன்!*
*உன் கோவில் வலம் வந்து தொழுது நிற்பேன்!*
*என்றென்றும் நீயே எனக்குத் துணை!*
*ஏறுமயில் ஏறிவந்து காப்பாய் என்னை!* (நீயிருக்கும்)

***-கி. குலசேகரன்-***

*கடினமாக வேலை செய்பவனுக்கு கைநிறையக் காசு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியான யோகம் என்னும் இராஜயோகம்

– திரு கு. சிவபாலராஜா அவர்கள் –

தியானம் உலக மக்கள் அனைவருக்கும் ஒத்துவரக் கூடியதொன்று. தியான வாழ்க்கையானது துறந்தார்க்கும் சந்நியாசிகளுக்குமே பொருந்துவது என்பது வெறும் கற்பனைப் பேச்சு. குடும்ப வாழ்க்கையில் உள்ளோர் தியான யோகம் செய்யலாம். தியான யோகம் செய்வதற்கு மூச்சுப்பயிற்சி (பிராணாயாமம்) செய்ய வேண்டும் என்னும் கட்டாய தேவை கிடையாது. ஆனால் மூச்சுப்பயிற்சியால் யோகியின் உடல் ஆரோக்கியம் பெறுகிறது என்பது உண்மையே. எனவே மூச்சுப்பயிற்சி செய்வது வெறும் உடல் ஓம்புதலுக்காகவும் செய்யப்படுகிறது. இப் பயிற்சியை ஹடயோகம் எனவும் அழைப்பர். இராஜயோகத்தின் கிரியை முறைகளில் மூச்சுப் பயிற்சியும் ஒன்றே. அதனால் நாம் கிரியைகள் செய்து நம்மைத் தூய்மைப்படுத்திய பின்னர் தாம் தியான யோகம் செய்தல் தக்கது என்பது திருமூலர் கூறியுள்ள கருத்தாகும். அவர் அருளியுள்ள அட்டாங்க யோகம் எனும் பகுதியில் இதனைக் காணலாம். இயமம் முதலாக சமாதி நிலை வரையும் உள்ள எட்டு வகையான யோகங்கள் யாவும் கிரியா யோகம் எனப்படும். இராஜயோகம் செய்தால் நாம் இராஜாபோல் வாழலாம். யோகியின் உடல் வலிமைபெறும். அதனால், திருமூலர் அட்டாங்க யோகமே சிறந்த யோகம் எனவும் அந்த யோகத்தையே பயிலுதல் சிறந்தது எனவும் அருளிச் செய்துள்ளமை காணலாம்.

அந்நெறி இந்நெறி என்னாதட் டாங்கத்
தந்நெறி சென்று சமாதியி லேநின்மின்
நன்னெறி செல்வார்க்கு ஞானத்தி லேகலாம்
புன்னெறி யாகத்திற் போக்கில்லை யாகுமே.

-திருமந்திரம் 551.

இராஜயோகத்தின் அதிமேலான சிறப்புக்களில் பிரதானமானது இறைவனின் அருள் ஒளி அண்டத்திலிருந்து பிண்டத்திற்கு யோகியின் நெற்றிப்பொட்டின் வழியாக யோகியின் உடலில் (தலையில்) நேரடியாக வந்து சேர்கிறது. இதனால், யோகியை இறைநிலைக்கு உட்படுத்துகின்றது. அதாவது இறைவனோடு ஆத்மா இரண்டறக்கலக்கும் அந்நிலை சமாதி எனப்படும். ஆத்மா பரமாத்மாவாகிய இறைவனுடன் தொடர்புறுகின்றது. மனிதருக்கு உடல் பற்றிய உணர்வுகள்தான் இறைப் பற்றினைக் கெடுக்கின்றன. ஆன்மா பற்றிய அறிவினை மேல் நிலைக்குக்கொண்டு வருதல் வேண்டும். இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் இடையே

*இளமை வாழ்க்கையில் ஒருமுறைதான் வரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகக் கடினமான பிரிசுவர் உள்ளது. அதனால் ஆன்மாவானது இறைவனைக் காணமுடியாமல் தவிக்கின்றது. எனவே, நமது தேகம் பற்றிய அபிமானம் நமக்கு வேண்டாம். ஆத்ம உணர்வே நமக்கு வேண்டும். எனவேதான் தியான யோகம் என்பது ஆன்ம உணர்வின் மேற்தரத்தையே குறிக்கும். ஆன்மாவைப் பற்றிய அறிவினைப் பெறுதல் முதற்படி. அடுத்து, ஞானத்தில் நம்பிக்கை கொள்ளுதல் வேண்டும். மூன்றாவதாக, இறைவன்மீது உள்ளன்பு கொள்ளுதல் வேண்டும். இவை மூன்றும் யோகப்பயிற்சியின் முக்கிய தேவைகளாகும். இவற்றினை விருத்தி செய்வதற்கே கிரியா யோகப் பயிற்சிகள் செய்யப்படுகிறது. யோகம் என்பது பொதுவாக ஆன்மீக போதையில் திளைத்திருப்பது, அதில் மூழ்குவது அதற்காகத் தன்னை அர்ப்பணிப்பது ஆகிய நிலைகளைக் குறிக்கும்.

மனத்தைக் கட்டுப்படுத்தும் நிலைகளே பிராணாயாமம் போன்ற கிரியா யோகப் பயிற்சிகள் ஆகும். இயமம் என்பது புலனடக்கம் செய்யும் வழியாகும். நியமம் என்பது நன்றாற்றல் என்றும் திருமந்திரத்தில் கூறப்பட்டுள்ளமை காணலாம். பண்புடையவன் நல்ல செயல்களைச் செய்வான். எனவே பண்புக்கு இலக்கணமாக அமைவது தீதுகளை அகற்றும் இயம யோகமே, அடுத்து பண்புடையவன் நற்காரியங்களைச் செய்வான். எனவே மனம் குழப்பமடைந்து தியானத்தைக் குழப்பமடையச் செய்யாமல் இருப்பதற்காகவே விரதங்கள், கட்டுப்பாடுகள், மூச்சுப்பயிற்சி போன்றவற்றை மேற்கொண்டு, மனதின் எண்ணும் சக்தியை நிறுத்தப் பாடுபடுகின்றான். மனமும் புத்தியும் ஆன்மாவின் சிறப்புமிக்க திறமைகளே எனக் கூறப்பட்டுள்ளது. இது இறைவனின் கூற்றாகும். இக் குணங்கள் உடலின் குணங்கள் அல்ல. ஆன்மாவின் குணங்களே. ஆன்மா உணர்வுள்ளது. அது அழிவற்ற தன்மை கொண்டது. ஞானத்தின் அடிப்படையில் செய்வதே தியானம் ஆகும். கடுமையான தவம், விரதம் முதலியன இதற்கு அவசியமில்லை. இலகுவாகச் செய்யத்தக்கது தியானம். அதனால்தான் திருமூலரும் மனிதர் இலகுவில் மேற்கொள்ளத்தக்க அட்டாங்க யோகத்தைக் குறிப்பிட்டு நமக்கு வழிகாட்டியுள்ளார். கடும் முயற்சிகளை விடுத்து இறைவன்பால் (சிவன்பால்) நமது சிந்தையை எளிதாகச் செலுத்துதலே இலகுவான இராஜயோகமாகும். இறைவனையடைய நமது புத்தியைப் பயன்படுத்தி அடைவதே இராஜயோகமாகும்.

தியானம் என்பது, இறைவனிடமிருந்து விடுபட்ட அல்லது அறுபட்ட ஆத்மீகத் தொடர்பைப் புதுப்பிக்கும் செயலாகும். இறைவனோடு நமக்கு இருந்த உறவினை மீண்டும் ஏற்படுத்தும் முயற்சியாகும்.

தியானம் என்பது பரத்தியானம், சிவத்தியானம் என இரண்டு வகைப்படும். அது உருவோடு கூடிய சத்தியை மேலாய் எண்ணுவது பரத்தியானம் என்றும், ஒளிமிக்க சிவனை எண்ணுதல் சிவத்தியானம் என்றும் இரு கூறுகள் யோகத்தில் உள்ளன. இவை இரண்டும் சத்தியை எண்ணுதல் சகளத்தியானம் என்றும் சிவனை எண்ணுதல் நிட்களத் தியானம் என்றும் மேலும் கூறப்படும் பரம்பொருளாகிய சிவன் நமது அண்ணாக்கு எனும் உறுப்பில் இருந்து கொண்டு பேரொளி காட்டி மனத்தை நிலைக்கச் செய்கிறார். நமது வாயினுள் கண், நாக்கு, மூக்கு, செவியாகிய ஞானேந்திரியங்கள் கூடுமிடத்தில் ஓர் துவாரம் இருப்பதைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணலாம். பிரமரந்திரத்திற்கும் இத் துவார வழிக்கும் தொடர்புண்டு. தியானத்தில் மனத்தின் இயல்பை மாற்றும் செயல் இங்குதான் நடைபெறுகிறது. அதனால் யோகி உய்தி பெறுவதற்கு அது ஏதுவாகிறது.

கண்ணாக்கு மூக்குச் செவிஞானக் கூட்டத்துட்
பண்ணாக்கி நின்ற பழம்பொருள் ஒன்றுண்
டண்ணாக்கின் உள்ளே அகண்ட ஒளிகாட்டிப்
புண்ணாக்கி நம்மைப் பிழைப்பித்த வாறே.

-திருமந்திரம் 599.

மோழை யடைந்து முழைதிறந் துள்புக்குக்
கோழை யடைக்கின்ற தண்ணற் குறிப்பினில்
ஆழ அடைத்தங் கனலிற் புறஞ்செய்து
தாழ அடைப்பது தன்வலி யாமே.

-திருமந்திரம் 2549.

இரு கண்களையும் சேர்த்து வைத்தல் வேண்டும். மனத்தைச் சிவன்பால் பொருத்தியிருத்தல் வேண்டும். இதனால் தலைக்கு மேல் உள்ள சிதாகாயப் பெருவெளியில் இறைவனை யோகி காணமுடியும். சிவனையே சிந்தையில் வைத்தல் வேண்டும். மக்களின் அறியாமை பற்றி திருமூலநாயனார் தனது திருமந்திரத்தில் கடிந்து அருளியுள்ளார். மக்கள் தமது உடலோடு பொருந்தியுள்ள உயிரைப்பற்றி ஒரு பொழுதும் எண்ணிப் பார்ப்பதில்லை. உடலில் சிவன் எழுந்தருளியிருக்கின்றார் என்ற உண்மையையும் ஒருபோதும் உணர்வதில்லை. சந்திரமண்டலமாகிய தலைப் பகுதியில் சத்தி நாதமயமாய் உள்ளார் என்பதையும் எண்ண மாட்டார்கள். தியானம் செய்யும்போது யோகி தனது சினம் அடக்குதல் வேண்டும். குண்டலினி யோகத்தில் சுழுமுனை நாடியில் பிராணனை நிறுத்தித் தியானித்தல் வேண்டும். இதனால் சிவம் சோதி வடிவாகத் தெரிவார். உள்ளத்தில் ஒளி தெரியும்படி தியான யோகம் செய்தால் யோகி சிவனைக் காண்பான். வேறு வகை யோகப் பயிற்சிகளால் அவ்விதம் சிவனைக் காணமுடியாது. "உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்" எனவும் பிற்காலப் புலவர் குறிப்பிட்டமை நோக்கலாம். உண்மை ஒளியற்று பல ஆயிரம் ஆண்டுகள் யோகம் இருப்பினும் இறைவனைக் காணமுடியாது.

எண்ணா யிரத்தாண்டு யோகம் இருக்கினும்
கண்ணார் அமுதினைக் கண்டறி வாரில்லை
உள்நாடி உள்ளே ஒளிபெற நோக்கினாற்
கண்ணாடி போலக் கலந்துநின் றானே.

-திருமந்திரம் 603.

தியானம் செய்யும் முறைகளை யோகி அறிதல் வேண்டும். தியானத்தின்போது இரண்டு கண் பார்வைகளையும் மூக்கு நுனியில் (கீழ் துவாரப் பகுதியில்) வைத்தல் வேண்டும். தியான யோகத்தில் இரண்டு விதமான பார்வை முறைகளில் ஒன்று கூறப்பட்டது. மற்றையது கண் பார்வையைப் புருவ நடுவில் செலுத்துதல் வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. தியானத்தில் முறைப்படி ஆழமாக மன ஈடுபாடு கொண்ட யோகிக்கு பலவித நாதங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தசநாதம்) மெல்லியதாகக் கேட்கும். தியானத்தில் மனம் ஈடுபடாதோர்க்கு இந்த ஓசைகள் கேட்காது. மணி ஓசை, கடல் ஓசை, யானை பிளிறும் ஓசை, புல்லாங்குழல் இசைக்கும் ஓசை, வண்டு, தும்பி, சங்கு, பேரிகை, யாழ் ஓசைகள் என்பன அவையாம்.

திருமூலர் அருளிச் செய்துள்ள கிரியா யோகப் பயிற்சிகளாவன அட்டாங்க யோகம் என்னும் பிரிவில் வரும் அட்டாங்க யோகம் முதல் அட்டாங்க யோகப் பேறு வரையுமுள்ள பத்து வகை யோகப் பயிற்சிகளாகும். அட்டாங்க யோக முறைகளை முறைப்படி பயில்வதால் "உடலோம்புதல்" என்னும் செயற்பாடு நடைபெறுகின்றது. அதனால் இவை யாவும் ஹட யோகப் பயிற்சிகளே. ஹட யோகம் உடலை உறுதிபடச் செய்யுமேயன்றி முத்திப்பேற்றினை அளிக்காது. தியான யோகம், சமாதி யோகம் ஆகியனவும் உடலோம்புவதற்குரிய யோகப் பயிற்சிகளே. இதனால், இவ்வுலகில் நீண்டகாலம் வாழ முடியும். சமாதி நிலையில் ஆத்மாவும், இறைவனும் இரண்டறக் கலந்திருக்கும் நிலையேற்படும். இதனால் மரணமில்லாப் பெருவாழ்வு கிடைக்கும்.

மூலநாடி முகட்டல குச்சியுள்
நாலு வாசல் நடுவுள் இருப்பிர்காள்
மேலை வாசல் வெளியுறக் கண்டபின்
காலன் வார்த்தை கனாவிலும் இல்லையே.

-திருமந்திரம் 622.

இவ்வுலகில் நீண்ட காலம் வாழ்வதால் ஏற்படப்போகும் பயன் யாதுமில்லை எனலாம். சிவலோகத்தில் நீண்டகாலம் வாழ்வது பெரும்பேறே. இதனையே வள்ளுவரும் கூறி வைத்தார்.

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்.

-குறள் 3.

இங்கே, "நிலமிசை" என்பதனை "மிசைநிலம்" எனவும் மாற்றுவர் பெரியோர். மிசை நிலம் என்பது சிவலோகத்தைக் குறிப்பது. வள்ளுவரும் தான் வழிபடும் கடவுளாகிய திருமாலையும் இலக்குமி தேவியையும் இங்கு குறித்துள்ளார். தாமரை மலரில் உறைபவள் இலக்குமி.

சிரசின்மேல் ஆகாய மண்டலத்தைப் பெருக்கி அதனால் அறிவு பெறுபவர் அமுதம் உண்ட போதான இன்பத்தையடைவர் என்பதை நிராதார யோகமான கேசரி யோகத்தில் திருமூலர் அருளியுள்ளமை காணலாம். இது இராஜயோகம் பற்றி அறிந்து கொள்ளும் மேல் விளக்கமாகக் காணப்படுகிறது.

ஊனூறல் பாயும் உயர்வரை உச்சிமேல்
வானூறல் பாயும் வகையறி வாரில்லை
வானூறல் பாயும் வகையறி வாளர்க்குத்
தேனூறல் உண்டு தெளியலு மாமே.

-திருமந்திரம் 804.

*தனக்குரிய வேலையைக் காண்பவனே வாழ்த்தப்பட்டவன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழித்துணை 89

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 நாம் விரும்பும் பூவை நாங்கள் இறைவனுக்குச் சாத்துகையில்
அவன் விரும்பும் அன்பினையும் அதனோடு சாத்தவேண்டும்
அவன் விரும்பும் அன்பைநாங்கள் அவனுக்குச் சாத்தாமல்
நாம் விரும்பும் பூவை மட்டும் சாத்திடுதல் சரியாமோ.

02 நாம் விரும்பும் ஆலயத்துள் இறைவனை நாம் இருத்துகையில்
அவன் விரும்பும் நெஞ்சத்தும் அவனைநாம் இருத்த வேண்டும்
அவன் விரும்பும் நெஞ்சத்தே அவனைநாம் இருத்திடாமல்
நாம் விரும்பும் ஆலயத்துள் இருத்திடுதல் சரியாமோ.

03 நாம் விரும்பும் வேளையெல்லாம் இறைவனைநாம் அழைக்கையிலே
அவன் விரும்பும் வேளையிலும் அவனிடம் நாம் செல்ல வேண்டும்
அவன் விரும்பும் வேளையிலே அவனிடம் நாம் செல்லலாம்
நாம் விரும்பும் வேளைமட்டும் அழைத்திடுதல் சரியாமோ.

04 நாம் விரும்பும் இப்பிறப்பில் இறைவனைநாம் போற்றுகையில்
அவன் விரும்பும் பிறப்பினையும் நாம் போற்றித் துதிக்கவேண்டும்
அவன் விரும்பும் பிறப்பினைநாம் போற்றித் துதிக்காமல்
நாம் விரும்பும் பிறப்பில் மட்டும் போற்றிடுதல் சரியாமோ.

05 கடலோரம் சங்கொன்றைக் கண்டெடுத்தோர் எறிந்திடாமல்
வலம்புரியோ இடம்புரியோ என்றறிந்து பலன்பெறல் போல்
வாழ்க்கையிலும் எதையும்நீர் ஆய்ந்தறிவீர் நட்டமில்லை
லாபமெனில் அதன்லாபம் உங்களுக்கே என்றறிவீர்.

06 பெருமுயற்சி சிலவேளை வெற்றியிலே முடிவடையும்
அதே முயற்சி சிலவேளை தோல்வியிலே முடிவடையும்
வெற்றியும் தோல்வியும் முடிவுதான் என்றறிந்து
முயற்சியைக் கனம்பண்ணும் வெற்றி பின்னர் உமதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 அறுசுவையும் அதன்மதிப்பும் நாவிலே இருக்குமட்டும்
நாவையது கடந்து விட்டால் எல்லாமே ஒன்றேபோல்
பெறுமதியும் பெருமதிப்பும் இப்புவியில் இருக்குமட்டும்
இறையுலகுட் புகுந்திட்டால் எல்லாமே ஒன்றாகும்.

08 அணுகுமுறை சரியானால் பெரும்லாபம் உமக்குண்டு
அது கொஞ்சம் பிசகானால் பெருநஷ்டம் உமக்குண்டு
தவறான அணுகுமுறை தனைத்தவிர்த்து வாழ்க்கையிலே
நிதானமாய் அணுகிடுவீர் நிகரில்லாப் பலன் பெறுவீர்.

09 தேவையென்று வந்திட்டால் தடைபெரிதாய்த் தெரிந்திடாது
தேவையில்லை என்று கண்டால் சிறுதடையும் பெரிதாகும்
சிறுதடையோ பெருந்தடையோ தடைதாண்டிச் செல்வதுவே
சிறப்புற்று வாழ்வதற்குச் சிறந்தவழி என்றறிவீர்.

10 விண்வெளியில் ஒலிஒளிகள் வியாபித்து இருந்தாலும்
வேண்டுவோர்க்கு வேண்டுவது கருவிமூலம் கிடைத்தல்போல்
ஆண்டவனும் அகிலமெலாம் வியாபித்து இருந்தாலும்
வேண்டுதலின் தன்மைக்கேற்ப காட்சிதந்து அவனருள்வான்.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

| **காசுக்கட்டளை** | **காசோலை** |
|---|---|
| செந்திவேல் மோகனதாஸ் | செந்திவேல் மோகனதாஸ் |
| சந்நிதியான் ஆச்சிரமம், | க.இல – 7342444 |
| தொண்டைமானாறு. | இலங்கை வங்கி, |
| தொ.இல – 0213219599, 0212263406 | பருத்தித்துறை. |

**Swift code - BCEYLKLX 028 - 7342444**

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டவன் ஒருவன் இருக்கின்றான்

– திரு முருகுப்பிள்ளை செல்லத்தம்பி அவர்கள் –

கோடி உள்ளவனுக்கு ஒரு கோடி
கோடி இல்லாதவனுக்கு ஆயிரம் கோடி

ஆண்டவன் ஒருவன் இருக்கின்றான் என்பதை அகிலம் முழுவதும் ஏற்றுக்கொண்ட போதும் அப்படி ஒருவன் இல்லை என்று எதிர்த்து கூறுபவரும் இவ்வுலகில் ஒரு சிலர் இருக்கத்தான் செய்கின்றார்கள். பூச்சியத்திற்குள் உள்ளே ஒரு இராஜ்ஜியத்தை ஆண்டுகொண்டு புரியாமலே இருப்பான் ஒருவன். அவனைப் புரிந்திருந்தால் அவன்தான் இறைவன் என்று கூறுகின்றான். திரைப்படக் கவிஞன் கவிஅரசு கண்ணதாசன். அப்படி அகிலத்தை ஆழ்வதற்கு ஆண்டவன் ஒருவன் இருக்கின்றான் என்றால் அவன் யார்? அவன் எங்கே இருக்கின்றான்? அவன் வரலாறுகள் இயல்புகள் ஆளுமைகள் பெறுபேறுகள் என்பனவெல்லாம் என்ன அவற்றை எல்லாம் விளக்கமாக எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இயற்கையின் தாபம் ஓங்கி இணையில்லா வடிவம் பூண்டு பிரபஞ்ச உற்பத்தியில் பெரும் தாபம் கொண்டு பரிணாம வளர்ச்சியின் பங்களிப்போடு எண்ணங்களால் எட்டிப்பார்க்க முடியாத பல்வகையான உயிர் இனங்களை உருவாக்கி உலகம் என இயங்க வைக்கும் ஒரு மாபெரும் சக்தி. ஜீவாத்மாக்களின் தலைவனான பரமாத்மாவாகும். அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது என்று பழந்தமிழ்ப் புலவர் ஔவைப்பாட்டியார் கூறியதற்கு இணங்க இந்த பரமாத்மாவால் படைக்கப்பட்ட உயிரினங்கள் யாவற்றிலும் மானிடர் வர்க்கமே முதன்மையாகக் கொள்ளப்படுகிறது.

உயிருக்கு உருவம் கிடையாது. அந்த உயிர் இன்றி எதுவும் நடக்காது. அதுபோல் ஆண்டவனுக்கும் உருவம் கிடையாது. அவன் இன்றி அணுவும் அசையாது. உருவம் ஒன்று இல்லாதவன் ஓர் இடம்கூட இருப்பதற்கு இல்லாதவன் என்று கூறப்படுகிறது. தனக்கு என ஓர் இடமும் இல்லாமல் தங்குவதற்கும் ஓர் இடம் இல்லாமல் தரணியில் தன் ஆட்சியை தக்கவைத்துக்கொள்வதுதான் எப்படி அப்படியாயின் அவன் எங்கே இருக்கின்றான்.

தூணிலும் இருப்பான். துரும்பிலும் இருப்பான். காற்றிலும் இருப்பான். கடல் அலையிலும் இருப்பான். உயிர் இனங்களின் உணர்வுகளிற்கு இன்றியமையாத இடங்களில் எல்லாம் அவன் அருளாட்சி பரவிக் கிடக்கின்றது. பொன்னும் பொருளும் நிறைந்தவர். நெஞ்சம் பொய்யில் வளர்ந்த காடு. எண்ணும் எழுத்தும் நிறைந்தவர். நெஞ்சம் இறைவன் திகழும் வீடு என்றும் கவியரசரின் தத்துவப் பாடல் வரிகள் வலியுறுத்துவதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

உருவம் என்ற ஒன்றைக் கொள்ளாத இந்த இறைவன் பாலுக்குள் நீர்போல் ஒழிந்தும் மறைந்தும் நீக்கமற ஒன்றாய் நிறைந்து கிடக்கின்றான். இன்னும் எள்ளினுள் எண்ணெய்போல் என்றும், எங்கும் தானவனாய் இருந்தும் அடியார் "பங்கினில் இருந்து பாங்குடன் வாழ்க" என்றும் கந்தசஷ்டி கவசத்தில் தேவராஜ சுவாமிகள் கூறுவதையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றுநோக்குவது சாலவும் பொருத்தமானதே. அகிலம் எல்லாம் பரந்தோங்கும் அன்புப் பரம்பொருள். எந்தெந்த இடங்களில் எந்தெந்த தேவைகள் தேவைப்படுதோ அந்தந்த இடங்களில் அதற்கேற்ற வடிவங்கள் எடுத்தோ அருளாட்சி புரிபவர். அதாவது கோடியுள்ளவனுக்கு ஒரு கோடி. கோடி இல்லாதவனுக்கு ஆயிரம் கோடி என்று கூறப்படுகிறது.

கோடியுள்ளவனுக்கு ஒரு கோடி. அவன் அதில் இருந்தே தன் ஆட்சியை, தேவைகளை பூர்த்தி செய்கிறான். வேறு இடத்தை அவனால் நிருவிக்க முடிவதில்லை. இந்தவகையில் எல்லா இடங்களையும் நிருவகிக்கும் ஒருவனுக்கு கோடி என்றதொன்று சொந்தமாக வேண்டுமா? அதில் இருந்து உலகம் முழுவதையும் இயங்கவைக்க முடியுமா? அவன் ஆட்சிக்குட்படுத்தி அருள்பாலிக்கும் இடம் எல்லாம் அவன் வாழும் கோடிகள்தான். ஆண்டவன் உலகத்தைப் படைத்தான். உயிரினங்களை உருவாக்கினான். இந்த உயிரினங்களில் உணவு உறையுள் முதலான உள்ளுதல் தேவைகளை பூர்த்தி செய்பவன் யார் படைத்தவன் படியளப்பான் என்பது ஒரு பாரிய பாங்கான பழமொழி. இதற்கமைய படைத்தவனின் பக்குவத்தை பறை சாற்றும் வண்ணம் கல்லினுள் தேரைக்கும் கருப்பை உயிர்க்கும் புல்லுணவே தந்து போற்றும் நம் நாதன் என்று கவியரசனின் மற்றொரு பாடலையும் நாம் கருத்திற்கொள்ளல் வேண்டும்.

மனித வாழ்வில் இம்மைக்கும் மறுமைக்கும் இயல்புகளை ஏற்படுத்தி அதன் பெறுபேறுகளை ஒழுங்குபடுத்துவதும் அண்டங்கள் அகிலங்கள் யாவும் அவன் ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டனவே. ஒரு மனிதனின் வாழ்வு அவனது அந்திம யாத்திரைவரை அண்ட சராசரங்களில் ஆட்சி புரியும் கோள்கள், கிரகங்கள் சுழற்சியிலும் பெயர்ச்சியினாலும்தான் நிர்ணயிக்கப்படுகிறது என்பது உண்மையும் உலக நியதியுமாகும்.

மனிதர்களாகிய எமது சகவாழ்வில் சரி, பிழை, நன்மை, தீமை, ஏற்றத்தாழ்வு, நீதி அநீதி என்பன ஏற்படும்போது நாம் கடவுளே என்கிறோம். இவைகளை நிர்வகிக்க ஒருவன் வேண்டும் அல்லவா? அவனே அந்தக் கடவுள் ஆவான். மரணப்படுக்கையில் உயிருடன் போராடும் ஒருவரை கண்டதும் நாம் உடனே ஆ... கடவுளே என்கிறோம். இந்த நோயாளியைக் கண்டதும் இதயத்தின் உணர்வுகளிற்கு உள்ளாகி உருவம் இல்லாத உறையுள் இல்லாத கண்களால் காண முடியாத இந்த இறைவனை உள்ளங்கையில் நெல்லிக்கனியைக் கண்டதுபோல் எமது அகக் கண்களால் கண்டுகொள்ள முடியவில்லையா? எனவே ஆண்டவன் ஒருவன் இருக்கின்றான் என்பதை உறுதிப்படுத்த இன்னும் ஆதாரம் வேண்டுமா. இதையே தெய்வம் பலப்பல சொல்லி பெரும் தீயை வளர்ப்பவர் மூடர் உய்வதனைத்திலும் ஒன்றாய் எங்கும் ஒரு பொருளானது தெய்வம் என்று பாடி முடித்தான் பாரதி.

---

*அடுத்தவரை விமர்சனம் செய்யாதே. அதற்குப் பதிலாக உன்னைக் கேள்வி கேட்டுக்கொள். இப்படியா நான் நடப்பது? மனிதனாகப் பிறந்துவிட்ட பிறகும் இப்படி நடக்கலாமா? ஒருவன் தனது தவறுகளைக் கண்டுபிடித்து அவற்றைக் களைய முற்படுவதுதான் உண்மையான சாதனை. தீயனவற்றை விலக்கி மேன்மையான பழக்கங்களைக் கைக்கொள்வதுதான் ஆன்மீக சாதனை.*

*நல்ல அறிவுரை விலைமதிப்பற்றது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையும் இசையும்

*– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு* அவர்கள் –

இறைவனை வழிபட பண்ணோடு இசை பாடித் துதிக்கும் மார்க்கம் மிக மிக உயர்ந்தது. இவ்வழி எம்மை ஆன்மீக உயர்ச்சிக்கு இட்டுச் செல்வதுமாகும். நாம் தினமும் இறைவழிபாடு செய்யும்போது ஒரு தேவாரத்தைத்தன்னும் இசையோடு பாடி இறைவனை மகிழ்விக்க இது ஒரு நல்ல சந்தர்ப்பம் ஆகின்றது.

இறையை மகிழ்விக்க இசைப்பாடல்போல் சிறந்த வழி வேறேதும் இல்லை என்று கூறலாம். காரணம் இறைவன் இசைப் பிரியன், நாத வடிவினன், எந்த மதத்தை எடுத்துக் கொண்டாலும் சரி, ஆங்காங்கே அவர்களது வழிபாட்டிலே இசைக்கு முக்கியத்துவம் கொடுக் கப்பட்டிருப்பதை நீங்கள் காண்பீர்கள்.

இறைவனுக்கு இசையில் மிகுந்த நாட்டம் உண்டு. அவனை இசை பாடி மகிழ்விக்கலாம் என்பதற்கு எமது மெய்யடியார்களது வாழ்க்கையிலேதான் எத்தனை சந்தர்ப்பங்களை நாம் காண்கின்றோம்.

சிவனாரின் வன்தொண்டரான சுந்தரமூர்த்தி நாயனாரின் வரலாற்றை எடுத்துக் கொள்வோம். தனது திருமணத்தை தடுக்க வந்த அந்தண முதியவரை அவர் யார் என்பதை அறியாத சுந்தரர், சிவனாரான முதியவரை நோக்கி "பித்தா பேயா" என ஏசு கின்றார். ஆனால் இறைவனோ, அவரை ஆட்கொண்டு, "நீ என்னை எவ்வாறு ஏசினாயோ அவ்வாறே பாடு" எனப் பணிக்கின்றார்.

இதேபோன்று ஞான மார்க்கத்தில் வாழ்ந்த மணிவாசகரிடம் சென்று "பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடு" எனப் பணிக்கின்றார் தில்லைக்கூத்தன். அது மாத்திரமா? அப் பாடல்களைத் தன் திருக்கரங்களால் ஏட்டில் எழுதியுமுள்ளார் இறைவன்.

இன்னமும் பாருங்கள்! வீணைக் கொடியோனான இலங்கேஸ்வரன் அரன் இருந்த மலையைப் பெயர்க்க முற்பட்டு அதன் கீழ் நசிந்து துன்பப்பட்டபோது அவனைக் காப்பாற்றி யது அவன் பாடிய "சாம கானம்".

இந்த வகையில், இறையை ஈர்க்கும் இசை எம்மை இறையிடம் இட்டுச் செல்வதால் அது தெய்வீக இசை என்றும் ஆகின்றது. "இசையினால் உனைப்பாட இனிக்குதய்யா" என்கின்றார் ஒரு கவிஞர்.

இந்திரியங்களால் பெறப்படும் இன்பத்தை ஈஸ்வர சரணாவிந்த இன்பத்தோடு ஒப்பிடும்போது "மாசில் வீணையும்" என இசைக்கே முதலிடம் தந்துள்ளார் அப்பர் சுவாமிகள்.

நல்ல சங்கீதம்தான் எம் முன்னோரால் முதலில் ஈஸ்வர சமர்ப்பணம் செய்யப்பட்டது. எனவேதான் இறையை இசைபாடி வழிபட வேண்டும் என்கின்றேன். இது பற்றி யாக்ஞவல்கியர் கூறியுள்ளதைப் பாருங்கள்.

*கடவுள் பெயரைச் சொல்லித் தொடங்கிய காரியம் கெட்டுப்போகாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீணை மீட்டிக்கொண்டு சுருதி லயம் தவறாமல் நாதோ பாசனை செய்துவிட்டால் போதும். தியானம் வேண்டாம். யோகம் வேண்டாம். தபஸ் வேண்டாம். பூஜை வேண்டாம். கஷ்டமான சாதனைகள் வேண்டாம். இதுவே மோட்சத்துக்கு எம்மை வழிகாட்டும். இது யாக்ஞவல்கியர் கூற்றாகும். கலியுகத்தில் இறைவனை அடைய இசைக்கு முதலிடம் தரப்பட்டுள்ளது என்பது ஜகத்குரு காஞ்சி காமகோடி பரமாச்சாரிய சுவாமிகளது அருள் வாக்கும் ஆகும். இதன் உண்மையை யாம் இன்று நேரில் காண்கின்றோம்.

எனவே, யாமும் தினமும் தவறாது சிறிது நேரம் தன்னும் இசைபாடி இறைவனைத் துதித்து இன்னருள் பெறுவோம். எமது குழந்தைச் செல்வங்களும் இசையுடன் தோத்திரம் பாடி இறைவழிபாடு செய்தலும் மிக அவசியமானது. மழலை இசையில் எம்பெருமான் மயங்காமலா போய்விடுவார்.

## சினம்

*சினம்மனி தருக்குவந்தால் சிறியவர், பெரியவரெல்லாம்*
*மனந்தடு மாறுஞ்செய்கை மனிதனை மிருகமாக்கும்*
*இனஞ்சன மென்றும்பாரா இழிநிலை வருமேயந்தச்*
*சினம்வரும் வேளையாரும் சிறிததை வெறுத்துய்வாரோ.*

*மனத்தினிற் சினமேவந்தால் மற்றையோர்க் கின்னல்செய்ய*
*நினைத்திடும் மனதுதீங்கை நிறுத்திடச் சினத்தைநீக்கு*
*உனக்கினிச் சினமேவேண்டா முணர்ந்துநீ யிதனைநீக்கில்*
*இனத்தினர்க் கின்னலில்லை யினித்துய ரேதுமில்லை.*

*சினமதை மறத்தல்சற்றுச் சிரமமே யெனிலும் நாங்கள்*
*சினமதைக் குறைத்துக் கொள்வோஞ் சிறப்பிதாற் பேறுவோமன்பை*
*மனமதில் நினைத்தே நல்ல மனிதரா யுலகில் வாழ*
*தினந்தின மிறைவன் நாமஞ் சிந்தையிற் செபித்துய்வோமே.*

## கணபதி ஜெபம்

*சிந்தையிலே யிருக்குமையன் திருநாமத்தை*
*தினஞ்செபித்துப் போற்றுகின்றே னப்பன் முன்னே*
*வந்தருள வேண்டுமென வேண்டிக் கொண்டால்*
*வந்தருள்வா னைந்துகரப் பெருமானெம்முன்*
*அந்தவகை வணக்கத்தை யறியாதோர்க்கு*
*அப்பெருமா னருளுருவாய்த் தோன்றுவானா?*
*சிந்தனைசெய் வாயிதனை யோயாதென்றுஞ்*
*செபித்திடுவோங் கணபதியே சரணமென்றே.*

*-ஆ. விநாயகமூர்த்தி-*

அடங்கத் தெரியாதவனுக்கு ஆளவும் தெரியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞான நூல்கள் கூறும் பதி இலக்கணம் (சிவன்)

– திரு செ. சிவபாதம் அவர்கள் –

ஞான நூல்கள் கூறும் முப்பொருள்கள் பதி, பசு, பாசம் என்னும் மூன்றாம். இறைவன், உயிர், உலகம் என்னும் இவற்றையே ஞானிகள் குருமூலம் கற்று கேட்டு சிந்தித்து தெளிவடைந்து சாதாரண மக்களாகிய நாம் சுலபமாக அறிந்துகொள்ளும் பொருட்டு மெய்கண்ட சாத்திரம் என்னும் பெயருடன் நூலாக ஆக்கித் தந்துள்ளனர். இதைப்பற்றி கச்சியப்ப சிவாச்சாரியார் பின்வருமாறு பாடல்மூலம் கூறுகிறார்.

சான்றவர் ஆராய்ந்திட தக்கவாம் பொருள்
மூன்றுள மறையெலாம் மொழிய நின்றன
ஆன்றதோர் தொல்பதி ஆருயிரத் தொகை
வான்திகள் தளையென வகுப்பர் அன்னவே.

**பதி - சிவம்**

பதி பசு பாசம் ஆகிய முப்பொருள்களில் பதியே முதல்தரமான பொருளாகும் என்பது சைவசித்தாந்த கொள்கையாகும். இப்பொருள் பதி சச்சிதானந்த சொரூபியாவர். சத் என்பது முக்காலத்தும் ஒரே தன்மையாய் உள்ள உண்மைப் பொருள் என்றும் சித் என்பது அறிவுப் பொருள் என்றும் ஆனந்தமான பொருள் என்றும் சொல்லப்படும். இது இப் பதியின் சூக்குமநிலையென்றும் சொருபநிலையென்றும் சொல்லப்படும். இப் பதி வெளியுல கிலுள்ள பொருட்களோடு சேர்ந்திருக்கும்போது தூலநிலை அல்லது தடத்தநிலை எனப்படும். புறப்பொருள்களை நோக்கி ஐந்தொழில்கள் செய்யும்போது பதியெனப்படுவார். வெளிப்பொருள் களைச் சேராது சுயப்பிரகாசமாயும் ஆனந்த சொரூபியாகவும் இருக்கும்போது சிவம் எனப் படுவார். இப் பதிக்கு பொதுவியல்பு சிறப்பியல்பு என இருவகைப்படும். பதியின் பொதுவியல்பு உயிர்களுடன் ஒன்றாயும் உடனாயும் வேறாயும் நிற்றல். சிறப்பியல்பு சச்சிதானந்தமாய் நிற்பதாம் பதியின் இப்பொதுவியல்லை ஆராய்ச்சி அறிவாலும் அறியலாம் சிறப்பியல்லை அனுபவ அறிவால் அறியப்படும்.

பதியின் சொருப இலக்கணம் பற்றி உமாபதி சிவாச்சாரியார் சிவப்பிரகாசம் என்னும் நூலில் கூறுவதைப் பார்ப்போம். வேதம் ஆகமம் அவற்றின் வழிநூல் சார்பு நூல் ஆகிய எல்லாவற்றிலும் உள்ள கருத்து பதி பசு பாசம் என்னும் முப்பொருளின் இயல்லை தெரிவித்தலாம். இவற்றும் பதியாவது மற்றைய இரண்டுக்கும் மேலாகவுள்ளதொன்றாம். அப் பதிதான் அருவமும் உருவமும் இல்லாததாய் குணமும் அடையாளங்களும் இல்லாததாய் மலத்தோடு சேராததாய் ஒன்றாய் அழிவில்லாததாய் அளவற்ற உயிர்களுக்கெல்லாம் அறிவுக்கு அறிவாய் சலனமற்றதாய் கண்டிக்கப்படாததாய் எப்போதும் ஆனந்த சொருபமாய்

*சிறு தீமைக்கு இடம்கொடுத்தால் பெரும் தீமை புகுந்துவிடும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்றறிவினால் அடையமுடியாததாய் அன்பர்கள் சேரும் முத்தி நிலையாய் விளங்குவதாம். இதனை அறிவால் தெளிந்தோர் சிவம் எனச் சொல்வர்.

பலகலை ஆகமம் வேதம் யாவையினும் கருத்து
பதி பசு பாசம் தெரித்தல் பதிபரமே அதுதான்
நிலவும் அரு உரு அன்றி குணம் குறிகள் இன்றி
நின்மலமாய் ஏகமாய் நித்தமாகி
அலகுஇல் உயிருக்கு உணர்வாகி அசலமாகி
அகண்டிதமாய் ஆநந்த உருவாய் அன்றிச்
செல அரிதாய் செல்கதியாய் சிறிதாகிப் பெரிதாய்
திகழ்வதுதத் தெளிந்துளோர் சிவம் என்பர்.

சுத்த சிவம் ஆன்மாக்களிடம் வைத்துள்ள அளவில்லாத கருணையினால் தன் சொரூப நிலையிலிருந்து பல படிகள் இறங்கி படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழில்களைச் செய்வார். இவ்வாறு ஐந்தொழில்களைச் செய்யும் நிலையினை தடத்தநிலை எனக் கூறுவார்கள்.

## பதியின் தடத்த இலக்கணம்

சிவசக்தி தனது திருவருளால் இச்சா சக்தி ஞானா சக்தி கிரியா சக்தி என்னும் சக்திகளைத் தர, இச் சக்திகளை நின்மலனாகிய சிவன் சேர்ந்து திருவருளையே திருமேனியாகக் கொண்டு நாதம் விந்து முதலிய தத்துவங்கள் வந்து சேர்கின்ற சுத்த மாயைப் பொருந்தி வேதம் ஆகமம் முதலிய பல்கலைகளையும் அருளிச்செய்து அசுத்தமாயை பிரகிருதி மாயைகளில் கொடிய வினைகள் கொண்டுள்ள தனு, கரண, புவன, போகங்களைப் படைத்து நிறுத்தி பின்பு இவற்றை தோன்றிய முறையில் ஒடுங்கச் செய்பவன்.

நீடுபராசக்தி நிகழ் இச்சா ஞானம் நிறை
கிரியை தர அதனை நிமலன்மேவி
நாடரிய கருணைதிரு உருவமாகி
நவின்று பல்கலை நாத விந்து ஆதி
கூடும் ஒளிவளர் குடிலை மாயை மேவி
கொடுவினை கொள் தனு கரண புவன போகம்
பீடுபெற நிறுவி அவை ஒடுக்கும் மேனி
பிறங்கிய நிட்கள சகளப் பெற்றியாமே.

## இறைவன் தடத்த நிலையில் நின்று எடுக்கும் திருமேனிகளும் செய்யும் ஐந்தொழில்களும்

இறைவன் ஆன்மாக்கள்மீது கொண்ட கருணையினால் சிவம், சக்தி, நாதம், விந்து என்னும் நான்கு அருவத்திருமேனிகளையும் மகேஸ்வரன் உருத்திரன் திருமால் பிரமா என்னும் உருவத்திருமேனிகள் நான்கும் சதாசிவம் என்னும் அருவுருவத்திருமேனி ஒன்றையும் உடையவராய் நின்று உயிர்களுக்கு திருவருள் செய்கின்றார். இத்திருமேனிகள் ஒன்பதினையும் பெரியோர் சிவபிரான் எடுக்கும் நவபேதங்கள் என்று கூறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அருவத் திருமேனிகள்**

சிவபெருமான் மேலே சொல்லப்பட்ட அருவத்திருமேனிகள் நான்குடன் நிற்கும்போது சுத்தர் எனப்படுவர். இதனையே பெரியோர்கள் நிஷ்கள நிலை என்பர். (களம்- வடிவம், நிஷ்களம் என்பது வடிவம் இல்லாதது- அருவம்) என்று சொல்லப்படுவது. அருவுருவத் திருமேனி - சதாசிவன். அருளல் அருளலாவது ஆன்மாக்களுக்கு பாசத்தை நீக்கி சிவத்தைக் காட்டுதல் என்றும் சிவபிரான் அருவுருவத் திருமேனியை எடுக்கும்போது சதாசிவன் என்ற பெயர் பெறுவார் என்று ஆறுமுகநாவலர் கூறியுள்ளார்.

**உருவத் திருமேனிகள்**

மகேஸ்வரன், பிரமா, திருமால், உருத்திரன் ஆகிய நான்கும் சிவபெருமானது உருவத் திருமேனிகளாம். மேலே சொல்லப்பட்ட திருமேனிகள் உருவமாகக் காணப்படும் தன்மையால் உருவத்திருமேனிகள் என்று கூறப்பட்டது.

**மகேஸ்வரன் - (மறைத்தல்)**

சிவபெருமான் உருவத்திருமேனி உடையவராக உள்ளபோது மகேஸ்வரன் என்று சொல்லப்படுவர். மறைத்தலாவது ஆன்மாக்களை தாங்கள் செய்த இருவினைப் பயன்களை அனுபவிக்கும்படி அதன் கட்டுப்பாட்டுக்குள் வைத்தல் என்று நாவலர் கூறியுள்ளார்.

**பிரமா - படைத்தல்**

இறைவன் பிரமாவை அதிட்டித்து நின்று படைத்தல் தொழிலைச் செய்வார். அதாவது ஆன்மாக்கள் செய்த நல்வினை தீவினைப்படி தனு, கரண, புவன, போகங்களை முதற் காரணத்திலிருந்து தோற்றுவித்தல் என்று நாவலர் கூறியுள்ளார்.

**திருமால் - (காத்தல்)**

இறைவன் திருமாலை அதிட்டித்து நின்று காத்தலாகிய தொழிலைச் செய்வார். காத்தலாவது தோற்றுவிக்கப்பட்ட தனு கரண புவன போகங்களை ஆன்மா அனுபவித்து முடியும் காலம்வரை நிறுத்துதல் என்று நாவலர் கூறியுள்ளார்.

**உருத்திரன் - (அழித்தல்)**

இறைவன் கால உருத்திரரை அதிட்டித்து நின்று அழித்தல் தொழிலைச் செய்வார். அழித்தலாவது தனு கரண புவன போகங்களை முதற் காரணத்தில் ஒடுக்குதல் என்று நாவலர் அவர்கள் கூறியுள்ளார். (தனு - உடம்பு, கரணம்- மனம் முதலாகவுள்ள கருவிகள், புவனம்- உடம்புக்குத் தேவையான உலகம். போகம்- அனுபவிக்கப்படும் பொருள்) இறைவன் ஐந்தொழில்களைச் செய்வதன் நோக்கம் உயிர்களை பிறப்பு இறப்பு என்று துன்பக்கடலில் நின்று கரையேற்றிப் பேரின்ப வாழ்வை கொடுப்பதற்காகவே.

*இறைவனுக்கு அஞ்சுவதே விவேகத்தின் தொடக்கம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவனின் எண் குணங்கள்

இறைவன் உயிர்கள்மேல் கொண்ட கருணையினால் நவபேதம் என்னும் தடத்தநிலையில் இறங்கி ஐந்தொழில் செய்கின்றார் என்பதை அறிந்தோம். இச் சிவனுக்கு சிறந்த குணங்கள் எட்டாகும் என்று மெய்கண்ட சாத்திர நூல்கள் கூறுகின்றன. அவை பின்வருமாறு:

தன்வயத்தனாதல் - (சுவதந்திரர்)
தூய உடம்பினனாதல் - (விசுத்ததேகத்தினர்)
இயற்கை உணர்வினனாதல் - (அனாதிபோதம்)
முற்றுமுணர்தல் - (சருவஞ்ஞர்)
இயல்பாகவே பாசங்களில் நீங்குதல் - (நின்மலர்)
பேரருளுடைமை
முடிவிலாற்றலுடைமை - (அநந்தசக்தி)
வரம்பிலின்பமுடைமை - (திருப்தி)

## திருமந்திரம் கூறும் பதி இலக்கணம்

சிவனொ டொக்கும் தெய்வம் தேடினும் இல்லை
அவனொ டொப்பார் இங்கு யாவரும் இல்லை
புவனம் கடந்தன்று பொன்ஒளி மின்னும்
தவனச் சடைமுடித் தாமரை யோனே.

சிவபெருமானோடு ஒப்பாகும் தெய்வம் எங்கும் தேடினாலும் இல்லை. இச் சிவனுக்கு நிகரானவர் யாரும் இல்லை. இச் சிவன் எல்லா உலகங்களுக்கும் அப்பாற்பட்டவன். பொன் போல ஒளிவிடும் தீ வண்ணம் போன்ற சடைமுடியையுடையவன். அன்பர்களின் மனம் ஆகிய தாமரை மலரில் இருப்பவன்.

அவனை ஒழிய அமரரும் இல்லை
அவன் அன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவன் அன்றி மூவரால் ஆவதொன்றில்லை
அவன் அன்றி ஊர்புகும் ஆற்றியேனே.

சிவபெருமானை தவிர்த்து தேவர்களுக்கு வேறு தலைவர் இல்லை. இவரே தேவாதி தேவன். இவரைவிட்டு செய்யக்கூடிய தவங்கள் எவையும் இல்லை. இவரது துணை இல்லாமல் மும்மூர்த்திகளால் ஆகக்கூடியது எதுவும் இல்லை. இத்துடன் இச் சிவபிரானது துணை இல்லாமல் முத்தியடையும் வழி அறியாது இருக்கின்றேன்.

சிவஞான போதத்துக்குப் பாண்டிப் பெருமாள் சிவஞான முனிவர் முதலானோர் விளக்கவுரைகள் செய்து எமக்குத் தந்துள்ளனர். இதனைப் பின்வருமாறு காண்போம். உலகம் தோன்றி நின்று அழியும். உயிர் தோன்றி நின்று அழிதல் இல்லை. உயிர் உலகத்தை தொழில்படுத்துவதில்லை. இரண்டையும் கடந்த பொருள் தொழில்படுத்துகிறது.

*கைக்கு வராததைக் கணக்குப் பார்க்காதே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்தையும் தனக்குள் அடக்கி மீண்டும் உலகத்தைத் தோற்றுவிப்பது எதுவோ அதுவே முழுமுதற் பரம்பொருள். உயிர்களை பாசம் அநாதியாகவே கட்டுப்படுத்தியுள்ளது. உயிர்களிடம் இருக்கும் பாசத்தை நீக்கி மெய்ஞானத்தை கொடுக்கும் நோக்கமாகவே பரம்பொருள் முத்தொழிலையும் செய்கிறார். இதன் நோக்கம் உயிர்கள் உய்யவேண்டும் என்னும் திருவருளேயாம். மலங்களின் கட்டுப்பாட்டால் ஆன்மா தமக்கு உயிர்க்குயிராகவுள்ள இறைவனை அறிவதில்லை. ஆன்மாவைப் பிடித்துள்ள பாசம் நீங்கவே இறைவன் வினைகளை அனுபவித்து கழிக்கும்படி சேர்க்கிறார். இவ்வினைகள் அனுபவித்து கழியும்போது பக்குவம் உண்டாகும். அப்போது இறைவன் மானிட உருவத்தில் குருவடிவம் தாங்கி வந்து தீட்சை கொடுத்து சிவஞானத்தை உபதேசிக்க ஆன்மா சகல கருமங்களையும் இறைவனின் திருவருட் செயலாகக் காணும். இப்படியாகப் பக்குவமடைந்த ஆன்மா மெய்யடியார்களுடன் கலந்து கூடி அவரது திருவேடத்தையும் சிவாலயத்தையும் சிவனெனக் கண்டு வழிபட்டு இறைபணி செய்து வாழ்வர்.

## திருவருட்பயன் கூறும் பதி இலக்கணம்

அகர உயிர்போல் அறிவாகி எங்கும் நிகரில்
இறை நிற்கும் நிறைந்து

அகரமாகிய உயிர் தானே தனித்தும் ஏனைய எழுத்துக்களுடன் கலந்து பிரியாமல் நிற்பதுபோல தமக்கு ஓர் உவமை இல்லாத கடவுள் உலகங்களிலுள்ள எல்லா உயிர்களிடத்தும் அறிவில்லாத சடப்பொருள்களிலும் எப்போதும் பிரிவில்லாமல் கலந்து நிற்பார்.

நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்
சலமிலன் பேர் சங்கரன்

தம்மை வழிபடாதவர்களுக்கு அவர்களின் பிறவித் துன்பத்தை நீக்கி மேலான முத்தியை கொடாதவரும் தம்மை வழிபட்டவர்களுக்கு பிறவித் துன்பத்தை நீக்கியும் பேரின்பமான முத்தியையும் கொடுப்பார் சிவன். இவர் விருப்பு வெறுப்பும் இல்லாதவர் ஆன்மாக்களுக்கு பேரின்பத்தை கொடுக்கிற தன்மையால் சங்கரன் என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றவர்.

## பிரமதேவர் தக்கனுக்கு கூறும் பதி இலக்கணம் கந்தபுராணம்

அவன் அருள் பெறாது முத்தி அடைந்தனர் இல்லை அல்லால்
அவன் அருள் இன்றி வாழும் அமரரும் யாரும் இல்லை
அவன் அருள் எய்தின் எய்தா அரும் பொருள் இல்லை ஆணை
அவன் அலது இறைவன் இல்லை அவனை நீ அடைதி என்றான்.

(அவன்- சிவபெருமான். எல்லா முதன்மையும்- எல்லா அனுக்கிரகமும் உள்ள முழுமுதற் பரம்பொருள் சிவபெருமானேயாகும்)

*நல்ல புத்தகம் இன்றும் என்றும் மாறா நண்பனே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவஞான சித்தியார் கூறும் பதி இலக்கணம்

எந்த தெய்வத்தை வணங்கினாலும் சிவபிரானே அத் தெய்வத்தை அதிட்டித்து நின்று அவ் வழிபாட்டுக்குரிய பயனைக் கொடுப்பார்.

யாதொரு தெய்வம் கொண்டீர் அத் தெய்வமாகி
ஆங்கே மாது ஒரு பாகனார்தாம் வருவர் மற்று அத்தெய்வங்கள்
வேதனைப்படும் இறக்கும் பிறக்கும் மேல்வினையும் செய்யும்
ஆதலால் இவைஇலாதான் அறிந்து அருள் செய்வன் நன்றே.

---

குயவன் ஒருவன் பானைகளைச் செய்துகொண்டிருந்தான். அங்கு ஏராளமான பானைகள், குடங்கள், சட்டிகள் அடுக்கப்பட்டிருந்தன. அவன் அருகில் ஓர் ஆடும் கட்டிப்போடப்பட்டிருந்தது. அவ்வப்போது அது "மே... மே..." என்று கத்திக்கொண்டிருந்தது. அங்கே ஒரு வயதான மகான் ஒருவர் மெல்ல நடந்தே வந்தார். குயவன் பானை செய்வதைப் பார்த்தபடியே தரையில் அமர்ந்தார். வந்தவருக்கு ஒரு சிறு மண் கலயத்தில் குடிக்கத் தண்ணீர் கொடுத்தான் அந்தக் குயவன். அதை வாங்கிக் குடித்த குரு, இந்த ஆட்டை நீ வளர்க்கிறாயா? என்று கேட்டார். இல்லைங்க சாமி. இது ஏதோ காட்டாடு. இந்தப் பக்கமாக வந்தது. பிடித்துக் கட்டிப்போட்டேன் என்றான் குயவன்.

எதற்காக? என்று கேட்டார் குரு. பண்டிகை வரப்போகிறதே! இறைவனுக்குப் பலி கொடுக்கலாமென்றுதான்... என இழுத்தான் குயவன். பலியா? குரு வியப்புடனே வினவினார். ஆமாம் சாமி. தெய்வத்துக்குத் திருவிழா அன்றைக்குப் பலி கொடுத்தால் விஷேசம். தெய்வமும் மகிழ்ந்தே வரம் கொடுக்கும். எல்லாமே சுபீட்சமாக இருக்கும்.

இதைக்கேட்ட குரு, எழுந்தார். தன் கையிலிருந்த குயவன் தண்ணீர் குடிக்கக் கொடுத்த மண் பானையை ஓங்கித் தரையில் அடித்தார். பானை துண்டு துண்டாகச் சிதறியது. குயவன் திகைத்தவாறே நின்றான். துறவியை வெறித்துப் பார்த்தான். துறவி, பின் நிதானமாகக் கீழே குனிந்தார். சிதறிய ஓட்டாஞ் சில்லுகளை ஒன்றுவிடாமல் பொறுக்கி அடுக்கினார். பிறகு குயவனிடம் நீட்டினார். என்ன சாமி இது? என்றான் குயவன் குரலில் உஷ்ணம் தெறித்தது. என்னுடைய பானையை உடைத்து அடுக்கி என்னிடமே நீட்டுகிறீர்கள். இது எனக்குப் பிடிக்கும் என்று வேறு சொல்கிறீர்கள். கேலியா? என்னை வம்புக்கு இழுக்கிறீர்களா? அல்லது உங்களுக்குப் பைத்தியமா? என்றே ஆத்திரப்பட்டான்.

அப்படியெல்லாம் எதுவும் இல்லையப்பா. உண்மையான அன்புடன்தான் இதை செய்தேன். குரு சிறிதும் பதட்டப்படாமலே சொன்னார். நான் செய்த அந்தப் பானையில் என் கடின உழைப்பு முழுவதும் அடங்கியிருக்கிறதே! அதை உடைக்க நான் எப்படிச் சம்மதிப்பேன்? இது எனக்கு பிடிக்கும் என்று யார் உங்களுக்குச் சொன்னது? சரி, நல்லது. ஆண்டவன் படைத்த ஓர் உயிரைக் கதறக்கதற வெட்டிக் கொன்று பலியிடலாம் என்று மட்டும் உனக்கு யார் சொன்னது? இதை இறைவன் வேறு மகிழ்ந்து ஏற்றுக்கொண்டு மகிழ்ந்தே வரம் தருவான் என்று நீ எப்படி நம்புகிறாய்? எந்தத் தாய் தன் குழந்தை கதறுவதைக் கேட்டு சகிப்பாள்? அல்லது எந்தத் தகப்பன் தன் குழந்தை கொல்லப்படுவதை விரும்புவான்? குருவிடமிருந்து அடுக்கடுக்காகக் கேள்விகள் பிறந்தன. குயவன் நிதானமாக ஆட்டின் கழுத்திலிருந்த கயிற்றை அவிழ்க்கத் தொடங்கினான்.

*ஆர்வம் உடையோரே ஆர்வத்தைத் தாண்டமுடியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| கா. விஜயசுரேஸ் | சுவிஸ் | 100000. 00 |
| சிவா நறுமணப்பூங்கா | யாழ்ப்பாணம் மரக்கறி, 1மூடை அரிசி | 2500. 00 |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 6000. 00 |
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |
| இ. சிவராஜா (இலங்கை வங்கி) | கரவெட்டி (கல்விப்பணி - மாதாந்தம்) | 15000. 00 |
| செ. கவிதா | லண்டன் (வல்வெட்டி) | 15000. 00 |
| சி. லக்ஷ்மன் | பருத்தித்துறை | 10000. 00 |
| டனாஸ் | லண்டன் | 15000. 00 |
| சுசீலா நகை மாடம் | பருத்தித்துறை தேங்காய், 1மூடை அரிசி | |
| சி. தங்கவடிவேல் (சிற்றி வெதுப்பகம்) | தும்பளை | 1மூடை மா |
| சுந்தரம் மருந்தகம் | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| ம. அனுஷியா | உடுப்பிட்டி | 5000. 00 |
| பா. தயானந்தன் | உடுப்பிட்டி | 3000. 00 |
| திரு சாலோஜன் குடும்பம் | மண்டைதீவு | 5000. 00 |
| க. பீதாம்பரம் நினைவாக | மாசியப்பிட்டி | 25000. 00 |
| கோ. ஷஷ்டிகுமரன் | புத்தூர் | 2000. 00 |
| தவ வரதராஜலிங்கம் நினைவாக | சுழிபுரம் | 2000. 00 |
| ஆ. கோபாலகிருஸ்ணன் | யாழ்ப்பாணம் | 20000. 00 |
| முருகன் அடியார் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| மு. ஸ்ரீரஞ்சித் | கொக்குவில் | 5000. 00 |
| திரு சிவகணேஸ் குடும்பம் | நோர்வே 50000. 00 ரூபா பெறுமதியான பொருட்கள் | |
| திரு மோகனப்பிரகாஸ் குடும்பம் | தாவடி | 1மூடை அரிசி |
| பொ. கோபாலகிருஸ்ணன் | கோண்டாவில் | 5000. 00 |
| மீனுஜா ரமேஸ் | கரணவாய் மத்தி | 16000. 00 |
| மு. ரகுமார் | கனடா | 10000. 00 |
| யோ. தர்ஷன் | தெல்லிப்பழை | 4புட்டி அரிசி |
| செ. சிவனேசன் | தும்பளை | 5000. 00 |
| ப. ருபேஸ்வரன் | வட்டக்கச்சி | 5000. 00 |
| ச. டிலக்ஷன் | கைதடி | 10000. 00 |
| ச. லாவண்யன் | நீர்வேலி | 1000. 00 |
| செ. சிவச்சந்திரன் | கனடா | 2000. 00 |
| கஜந்தன் தீரன் | ஏழாலை (கனடா) | 20000. 00 |
| ம. ஜஸ்வித் | வல்வெட்டித்துறை | 1500. 00 |
| ம. அக்ஷயன் | கனடா | 5000. 00 |

*தன்னடக்கம் இல்லாதவன் பிறரை அடக்க முடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நி. ஹஸ்னா | கோண்டாவில் | 10000. 00 |
| செ. அத்விகா | கோண்டாவில் | 3000. 00 |
| க. செந்தில்கிரி | கொழும்பு | 5000. 00 |
| க. நரசிம்மன் | கல்வியங்காடு | 10000. 00 |
| பி. சகீலன் | கோண்டாவில் | 1000. 00 |
| ப. ஆருரன், ர. நிருஷிகா | தெல்லிப்பழை | 5000. 00 |
| S. ஐங்கேஸ்வரன், S. ரங்கேஸ்வரன் | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| ச. அன்னம்மா | இணுவில் | 10000. 00 |
| சரவணபவானந்தன் நினைவாக | கரணவாய் | 5000. 00 |
| N. சண்முகநாதன் | இணுவில் | 5000. 00 |
| திருமதி உ. யோகாம்பிகை | பிரான்ஸ் (மூளாய்) | 15000. 00 |
| த. தனுஷன் | வசாவிளான் | 2000. 00 |
| ம. நிஷாந்தன் | ஏழாலை | 1500. 00 |
| T. தாமரைமணாளன் | சுன்னாகம் | 5000. 00 |
| க. சோதிவேல் | கனடா | 10000. 00 |
| சு. சிவதாசன் | புன்னாலைக்கட்டுவன் | 4000. 00 |
| உ. குருபரன் | ஆவரங்கால் | 10000. 00 |
| சு. திருப்பரங்கிரிநாதன் | உடுப்பிட்டி | 5000. 00 |
| ஸ்ரீகரன் அபிலஷா | பிரான்ஸ் | 10000. 00 |
| செ. நவரத்தினசாமி | உடுப்பிட்டி | 5000. 00 |
| செ. பேரின்பராசா | லண்டன் | 5000. 00 |
| S. சதீஸ் | ஏழாலை | 10000. 00 |
| N. நரேந்திரன் | அரியாலை | 1000. 00 |
| க. ராமசாமி | பிரான்ஸ் | 5000. 00 |
| அ. குமாரசாமி | பம்பலப்பிட்டி | 5000. 00 |
| வி. மாலினி | அளவெட்டி | 5000. 00 |
| K. சிவபாலன் | இணுவில் | 5000. 00 |
| ச. காசினி | வல்வெட்டித்துறை | 5000. 00 |
| கி. தர்ஷினி | சிங்கப்பூர் (வல்வெட்டித்துறை) 10 சிங்கப்பூர் டொலர், | 26200. 00 |
| J. லிவ்வியா | சுவிஸ் (ஏழாலை) | 5000. 00 |
| J. ஆதித்தியா | பிரான்ஸ் (ஏழாலை) | 5000. 00 |
| நி. திவ்வியலட்சுமி | கனடா | 1000. 00 |
| சு. ரம்மியா | கனடா | 1000. 00 |
| ச. கௌரீசன் | மல்லாகம் | 5000. 00 |
| இ. லக்ஷ்மணன் | பண்டத்தரிப்பு | 5000. 00 |
| நி. லக்ஷிபன் | சிறுப்பிட்டி | 5000. 00 |
| க. தங்கராஜா | திருகோணமலை | 5000. 00 |
| சிறீ. சாரங்கன் | லண்டன் | 30000. 00 |

*காலத்தின் அருமை அறிந்தவர் அதை வீணாக்கமாட்டார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| பொ. செல்வராணி | கனடா | 20000. 00 |
| J. சயிலகா மூலம் த. உருத்திரநாயகி நினைவாக | பன்னாகம் | 10000. 00 |
| J. சயிலகா மூலம் சு. மதியாபரணம் நினைவாக | பன்னாகம் | 10000. 00 |
| செல்வா, விமலா, சுதாகரன் | அமெரிக்கா | 50000. 00 |
| சாந்தி புடவையகம் | யாழ்ப்பாணம் | 25000. 00 |
| லதுஷா | உடுப்பிட்டி | பருப்பு, 30K அரிசி |
| ஸ்கந்தமணி குடும்பம் | நோர்வே | 50K சீனி |
| அபிலா சரவணன் | இணுவில் | 10K அரிசி |
| மா. ரத்தினராணி | மானிப்பாய் | 5000. 00 |
| க. ஜெகதீஸ்வரன் | நவாலி | 10000. 00 |
| திரு தனராஜசிங்கம் குடும்பம் | ஏழாலை | 4000. 00 |
| ர. அஸ்மிதா | திருநெல்வேலி | 5000. 00 |
| தி. பரமசிவம்பிள்ளை | வியாபாரிமூலை | 10000. 00 |
| க. கோபிகா | மல்லாகம் | 20000. 00 |
| தி. உசாந்தன், ம. ராசேந்திரம் | கோண்டாவில் | 7000. 00 |
| இ. நிதுஷன் | மானிப்பாய் | 1000. 00 |
| க. கௌசலியா | அளவெட்டி (கனடா) | 5000. 00 |
| R. தியாகவதி | சுவீடன் | 10000. 00 |
| வி. விக்னேஸ்வரன் | பருத்தித்துறை | 2000. 00 |
| க. லோகேஸ்வரன் | கொழும்பு மரக்கறி, 3 புட்டி அரிசி | 2000. 00 |
| வி. மகிழிசை | லண்டன் | 15000. 00 |
| N. நந்தினி | வயாவிளான் | 15000. 00 |
| G. உருத்திரா | சுதுமலை | 10000. 00 |
| ப. சுகந்தன் | தம்பசிட்டி | மரக்கறி, 25புட்டி அரிசி |
| வி. தயாநிதி | கிளிநொச்சி | 5000. 00 |
| கா. தங்கமலர் | கிளிநொச்சி | 500. 00 |
| R. புவனேஸ்வரி | பருத்தித்துறை | 5000. 00 |
| ரா. கீர்த்திகா | லண்டன் | 1மூடை அரிசி |
| R. ரட்ணசோதி | உரும்பராய் | 10000. 00 |
| கு. ரங்கநாதன் | இணுவில் | 10000. 00 |
| S. சிவாஸ்கரன் | சுவிஸ் | 20000. 00 |
| கு. அக்ஷயா | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| க. நாகேஸ்வரி | கனடா | 2000. 00 |
| ம. கிருபாகரன் | குஞ்சர்கடை | 5000. 00 |
| திரு குமாரதாஸ் குடும்பம் | கனடா | 20000. 00 |
| மு. ரவி | காங்கேசந்துறை | 1500. 00 |
| ஜெனி | | 1500. 00 |
| தெ. விநாயகநாதன் | பருத்தித்துறை | 5000. 00 |

***வரும் முன்னர் காக்காவிட்டால் வாழ்க்கை பாழாகிவிடும்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| க. பாஸ்கரன் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| ய. நிஷானா | குடத்தனை | 5000. 00 |
| வீரமங்கை ஸ்ராலினா | காரைநகர் | 5000. 00 |
| க. சந்திரகுமார் | நீர்வேலி | 1000. 00 |
| ந. சிவகுமார் | இணுவில் | 38000. 00 |
| க. சுஜீபன் | உடுவில் | 500. 00 |
| N. நிலூஷா | பிரான்ஸ் | மரக்கறி, அரிசி |
| சி. காருண்யா | இணுவில் | 5000. 00 |
| வ. தர்மசேனன் | கனடா | 5000. 00 |
| வ. பரஞ்சோதி | கனடா | 5000. 00 |
| திரு சின்னராசா குடும்பம் | இணுவில் | 10000. 00 |
| திரு உதயகுமார் | கனடா | 60000. 00 |
| ர. பிரதாப் | சாவகச்சேரி | 1200. 00 |
| க. விஜேந்திரா | கனடா | 3000. 00 |
| த. ஆதனா | கனடா | 50000. 00 |
| த. ஆதிகா | கனடா | 20000. 00 |
| திரு தனராஜன் குடும்பம் | கனடா | 30000. 00 |
| க. மோசிகா | வதிரி | 1000. 00 |
| அ. காந்திமலர் | உரும்பராய் | 5000. 00 |
| திரு விஜயகுமார் குடும்பம் | லண்டன் | 5000. 00 |
| திரு சுதாகரன் குடும்பம் | புலோலி | 2000. 00 |
| திரு நடராசா குடும்பம் | புலோலி | 5000. 00 |
| ப. அருள்குமரன் | சுதுமலை மரக்கறி, 1புட்டி அரிசி | 5000. 00 |
| சா. கனிஸ்கா, சா. தருணிகா | சுதுமலை | 20000. 00 |
| S. சுந்தரேஸ்வரசர்மா | மாதகல் | 5000. 00 |
| இ. திருச்செந்தூரன் | முரசுமோட்டை | 6000. 00 |
| இ. தயாபரன் | முரசுமோட்டை | 6000. 00 |
| சுமன்ராஜ் கந்தசாமி | மட்டுவில் | 100000. 00 |
| சி. சதீஸ்வரன் | நெல்லியடி | 30000. 00 |
| கி. கௌசலி | கனடா | 200 டொலர் |
| ப. ஆறுமுகவேல் | இடைக்காடு (சுவிஸ்) | 10000. 00 |
| சிவஈஸ்வரன் | நீர்வேலி | 15000. 00 |
| ர. சுபீஸ்ஷனன் (திரு வீடியோ) | அல்வாய் | 10000. 00 |
| வி. விசிதரன் | சிறுப்பிட்டி மரக்கறி, 2புட்டி அரிசி | 5000. 00 |
| சி. அசிதன் | வட்டுக்கோட்டை | 10000. 00 |
| ச. ஆதீசன் | லண்டன் | 2000. 00 |
| சி. அன்புமலர் | வட்டுக்கோட்டை | 3000. 00 |

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சண்டேசர்

– திருமதி பொ. திலகவதி அவர்கள் –

சோழ நாட்டில் சேய்ஞலூர் என்ற சிவத்தலம் உள்ளது. அஃது அந்தணர்கள் நிறைந்து வாழும் ஊர். அதன்கண் காசிப கோத்திரத்தில் எச்சத்தன் என்ற மறையவன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவனுடைய மனைவி பவித்திரை என்பவள். இவ்விருவருக்கும் விசாரசருமர் எனும் மைந்தர் ஒருவர் வந்து உதயஞ் செய்தார். "முந்தையறிவின் தொடர்ச்சியினால் முகைந்த மலரின் வாசம்போல" ஐந்தாண்டு நிரம்பும் முன்னரே, அவர் சந்தமறைகளும், ஆகமங்களும் தகவுற உணர்ந்து தெளிந்தார். ஒருநாள் அச்சிறிய பெருந்தகையார் தாம் பள்ளிக்கு செல்லுங்கால் வழியில் ஓர் இடையன் பசுக்களை அடித்து கொடுமை செய்வதைக் கண்டான். உள்ளம் வருந்தினார். மனம் கலங்கினார். பசுக்களின் அருமை பெருமைகளை அவனுக்கு எடுத்து அறிவுறுத்தி தானே இனி இந் நிரைகளை மேய்த்துவரத் தலைப்பட்டார்.

பசுக்கள் நன்கு புல் மேய்ந்து, மடி பெருகி முலை சுரந்து பால் கறந்து வந்தன. சேய்ஞலூர் மறையவர்கள் அனைவரும் மகிழ்ந்தனர். பசுக்களுக்கு விசாரசருமர்பால் மிகவும் அன்பும் ஈடுபாடும் பெருகின. அவரைக் கண்டாலே சந்தோஷம் கொண்டு அவர்தம் அருகு சார்ந்து, உருகி நின்றன. அன்பின் மிகுதியால் கறவாமே பால் பெருகி பொழிந்து நின்றன. பசுக்கள் பால் பொழிவது கண்ட விசாரசர்மருக்கு அந்தப் பால் இறைவனுக்குத் திருமஞ்சனம் செய்யப் பயன்படுமே என்னும் குறிப்புத் தோன்றியது. அன்பு பெருகிய விசாரசருமர் ஆற்று மணலில் சிவாலயமும், கோபுரமும், சிவலிங்கமும், திருச்சிற்றாலயம் முதலியனவும் வகுத்து சிவாகம முறைப்படி சிவபூசையில் ஈடுபடத் தொடங்கினர்.

சிவபூசை செய்யுங்கால், இவர் திருமஞ்சனம் ஆட்டும் செயலின் இயல்புணராத சேய்ஞலூர் மறையவர்கள், இவர் பசும்பாலைக் கறந்து மண்ணில் கவிழ்த்து வீண் ஆக்குகின்றார் என எச்சத்தன்பாற் சென்று குறை கூறினர். எச்சத்தன் அதுகேட்டு சினந்து வந்து அங்கிருந்த ஒரு மரத்தின்மீது ஏறி ஒளித்திருந்து யாவற்றையும் கண்டான். விசாரசருமர் சிவபூசை செய்யும்போது திருமஞ்சனக் குடப்பாலை காலால் இடறி சிந்தினான். அதைக் கண்ணுற்ற விசாரசருமர் சிவ தியானத்தில் அழுத்தி தம்மை மறந்திருந்த நிலையில், அருகே கிடந்த ஒரு கோலை எடுத்து எறிந்தார். அக்கோல் அருளால் மழுவாக மாறி எச்சத்தனுடைய இரு கால்களையும் வெட்டி அவனை கீழே விழும்படி செய்தது. விசாரசருமர் பின்னரும் சிவ வழிபாட்டிலேயே மனம் ஒன்றி நின்றார்.

சிவபெருமான் வெளிப்பட்டு பக்தி முதிர்ந்த பாலகனார் ஆகிய விசாரசருமர்க்கு காட்சி கொடுத்தார். "நம் பொருட்டால் ஈன்ற தந்தையை விழ எறிந்தாய். அடுத்த தந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி உனக்கு நாம்" என்று அருளிச் செய்தார். கருணையினால் அவரை அணைத்துத் தழுவி உச்சிமோந்து மகிழ்ந்தார். சிவபிரானின் திருமலர்க் கைகளால் தீண்டப் பெற்றமையால் விசாரசருமரின் மாயமலயாக்கை, சிவமயமாகி ஒளிவடிவம் பெற்றது. அவர் திருவருளில் மூழ்கித் திளைத்தார். அரனார் மகனார் சண்டேசுவரர் சிவபிரானுக்கு மகன்மை முறையினராக ஆட்கொள்ளப் பெற்றவர் என்பதனை,

"வந்து மிகைசெய் தாதைதாள்
மழுவால் துணிந்த மறைச் சிறுவர்
அந்த உடம்பு தன்னுடனே
அரனர் மகனார் ஆயினர்"

என வரும் பெரியபுராணச் செய்யுள் விளக்கும் சிவபிரானுக்குப் பிள்ளையாகும் பெருமை பெற்றவர் மூத்த பிள்ளையார் (விநாயகர்), இளைய பிள்ளையார் (முருகன்), காழிப் பிள்ளையார் (சம்பந்தர்), சேய்ஞலூர்ப் பிள்ளையார் எனச் சண்டேசுவரர் வழங்கப் பெறுகின்றார்.

சண்டேசர், சண்டீசர், சண்டேசுவரர், சண்டிகேசர், சண்டேசுவர நாயனார் எனப் பல வகைகளில் இவருக்கு பெயர்கள் வழங்கும். சண்டேசுவரரே சிவனடியார்கள் அனைவருக்கும் தலைமை உடையவர் ஆவார். அதனால் "தொண்டர்நாயகம்" என்னும் பெயரும் உண்டு. சிவாலயங்களில் பஞ்சமூர்த்திகள் புறப்பாடு அல்லது திருவீதி உலா நிகழும்போது அவர்களுள் ஒருவராக விளங்குபவர் சண்டேசர். அடியார்களுக்கெல்லாம் தலைவராகத் திகழ்தல் பற்றியே அடியார்களின் சார்பாளர் (பிரதிநிதி) என்ற முறையில், இறைவனின் திருவீதியுலாவில் சண்டேசுவரரும் கலந்து எழுந்தருளிச் சிறப்பிக்கின்றார்.

எல்லா சிவாலயங்களிலும் இவருக்கு தனியே ஒரு சிறு சந்நிதி உண்டு. அது கருவறைக்குப் புறம்பே, அபிடேகத் தீர்த்தம் விழும் கோமுகியை அடுத்து அருகில் அமைக்கப்பட்டிருக்கும். திருக்கோயிலுக்குச் சென்று சிவபிரானை வழிபடும் அன்பர்கள் கோயிலை முறையே வலம் வந்து, ஒவ்வொரு மூர்த்தியையும் வணங்கி முடித்துக் கொண்ட பிறகு சண்டேசுவரர் கோயிலை அடைதல் வேண்டும். சில மக்கள் கோயில்களில் சண்டேச மூர்த்தியின் முன்பு தமது ஆடைகளின் நூல் இழைகளை எடுத்துப் போடும் சிவபாதகச் செயல் புரிகின்றனர். அது பெரும் தவறு. சண்டேசர் இடையறா சிவத்தியானத்தில் ஈடுபட்டிருப்பவராதலின், அவருக்கு நம் வருகையும், வேண்டுகோளையும் தெரிவிக்கும் வகையில் ஓர் அறிகுறியாகவே நாம் அவர் தம் திருமுன் சென்று நம் கைகளை மெல்லெனத் தட்டு கின்றோம். சிவ தரிசனப் பலனை அளித்தருளல் வேண்டும். என்று அவரை பிரார்த்தித்து அங்கு பெற்ற திருநீற்றை அணிந்துகொள்ளல் வேண்டும். சண்டேசுவரரை தரிசனம் செய்து முடிக்காதபோது சிவதரிசனம் நிறைவு பெறாமையோடு அதன் பயனும் நமக்கு சித்திப்பதில்லை.

சிவபிரான் அவரைத் தம் தொண்டர்களுக்கெல்லாம் தலைவராக ஆக்கினார். "யாம் நினக்கு சண்டீசன் என்னும் பதம் தந்தோம்" என்று கூறி அதற்கு அடையாளமாகத் தமது சடைமுடியினின்று கொன்றை மாலையினை எடுத்து விசாரசர்மருக்குச் சூட்டித் திருவருள்

*நம்மால் செய்யமுடிந்ததைச் செய்வதே தர்மம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்தார். சிவபிரான் சண்டேசப்பதம் அளித்து அனுக்கிரகம் புரிந்த நிலையே "சண்டேச அனுக்கிரக மூர்த்தம்" எனப்படும்.

ஆதலால் நாங்கள் சண்டேசருக்கு முன்சென்று நினைவால், வாக்கால், காயத்தால் வணங்கி சிவ தரிசனப் பலனை தரும்படி வணங்கி இம் மண்ணில் நல்லவர்களாக வாழ்வோம்.

---

**பூரணமான முருகன் அருளைப் பெற்றவர் திரு மோகன் சுவாமி அவர்கள்**

தெய்வம் என்பது கண்ணெதிரே தோன்றாது. ஆனால் கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது என்பார்கள். எமது வேலைகள் சுலபமாக முடியும்போது ஆண்டவன் அருளினால் இவை நடக்கின்றது என்கிறோம். தூய்மையான மனங்கள் எங்கு உண்டோ தெய்வம் அங்குண்டு. செய்யும் தொழிலை மனச்சுத்தியுடன் செய்தாலே தெய்வம் வந்துறையும் என்பார்கள். இதற்கு சமீபத்தில் பவளவிழாக் கண்ட சுவாமி மோகனதாஸ் அவர்கள் ஒரு உதாரணம்.

நான் ஒரு ஏழை, சாதாரண மனிதன்தான். நான் ஒரு கருவிதான். எதற்கும் உள்ளிருந்து நடத்தும் முருகனே முழுப்பொறுப்பு என்கிறார். அதிலே எந்த வியப்பும் இல்லை. அதுவே உண்மையும்கூட.

எம் வீட்டில் நடக்கின்ற ஒரு நிகழ்வில் ஒரு திருமண நிகழ்வின்போது எம் வீட்டிற்கு எவர் எவர் வருவார்கள் என்பதுகூட எமக்கு நன்கு தெரிந்துகொண்டும் நாம் படும்பாடு அன்னதானம் செய்யும்போது மரக்கறிகள், சோறு காணுமோ? எப்படி ஆகுமோ? என்ற பயம் எமக்கு மேலோங்கி நிற்பதை நாம் உணர்வோம் அல்லவா. வர இருப்பவர்கள் எவ்வளவு தொகை என்று அறிந்தும் இப்படி என்றால்?

எத்தனை, எத்தனை ஊரில் இருந்து எத்தனை எத்தனை பேர் வருவார்கள் என்று கணக்குத் தெரியாமல் நித்தமும் அன்னப்பணி குறைவின்றி நடக்குதென்றால் முருகன் நேரடியாக மோகன் சுவாமியுடன் இருக்கின்றார் என்பது கண்கூடுதானே. என்னதான் சொன்னாலும் வெள்ளிக்கிழமைகள், திருவிழாக் காலங்கள், திருமண நாட்கள் என்றால் பல்லாயிரம் பேர் வருவார்கள். என்ன அதிசயம் இல்லை என்று கூறாது அத்தனை பேருக்கும் உணவு கொடுப்பதை நாம் அறிவோம்.

எம் வீட்டை வருபவரை ஒப்பிட்டுப் பாருங்கள். இதன் கஸ்ரம் எமக்குப் புரியும். புண்ணியம் செய்திருக்க வேண்டும் இவரைப்போல் பிறக்கில். எத்தனையோ ஏழைகளுக்கு உதவுகின்றார். துவிச்சக்கரவண்டிகள், கோழி வளர்ப்புக்கள், சுயதொழில் செய்ய என பல உதவிகள், வைத்தியத்துறை சார்ந்த செயற்பாடுகள், மலையகத்திலே மண்சரிவு இடம்பெற்றபோது உதவிகள், பாடசாலைப் பிள்ளைகளின் குடிநீர் வசதிகள், பாடசாலை உபகரணங்கள், தொண்டர் ஆசிரியர்கள் வேதனம், கதிர்காம யாத்திரைகளின்போது பணத்தோடு உலர் உணவுப்பொதிகள் அத்தோடு கலைப்பணி, ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகள், மாத வெளியீடு ஞானச்சுடர் சஞ்சிகை, பௌர்ணமி தினத்தில் அதிகாலையில் நடைபெறுகின்ற திருவாசக முற்றோதல் போன்ற நிகழ்வுகள் அத்தோடு இன்னும் பற்பல உதவிகள் வறியவர்களுக்குச் செய்து வருகின்றார்.

இவர் காலத்தில் வாழ்வது நாம் பிறந்த நற்பலன் என்றே கூறவேண்டும். கண்கூடாக இவை யாவும் கண்டு மகிழ்கின்றோம். பற்பல பட்டங்கள் பெற்றிருக்கின்றார். நாம் அறிந்தவைகள் குறைந்தவையே. 31.08.2024 அன்று நடைபெற்ற பவளவிழா நாயகனை வாழ்த்தி நூற்றாண்டு விழாவினையும் கண்டு மகிழ இறைவனை வேண்டி நிறைவு செய்கின்றேன்.

*-சின்னப்பு தனபாலசிங்கம்-*

---

*அமைதியாய் இரு விரும்பியதை அடைவாய்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயநலம் பொதுவாழ்வைச் சிதைக்கும்

**– திரு சி. நற்குணலிங்கம்** அவர்கள் –

சுயநலத்துக்கு இங்குள்ள மனிதரிடையே பஞ்சம் இல்லை. தொழில் ரீதியாக, சேவை ரீதியாக பிரிக்கப்படும்போது இதற்குள் அடங்குபவர்கள் பெரும்பாலும் சுயநலவாதிகள் எனும் ஒரு அடைப்புக்குள் ஒடுங்கிப்போகிறார்கள். சுயநலம் அல்லது தன்நலம் என்பது ஒவ்வொருவரும் தமது நலன்களுக்கே முக்கியத்துவம் கொடுத்து செயற்படுவதைக் குறிக்கிறது. இன்றைய காலத்தில் இங்கு அனைத்துத் தரப்பிலும் ஆழமாக வேரூன்றி புரையோடி அனைவரையும் ஆட்டிப்படைக்கும் மனிதனின் மாறுபட்ட மற்றொரு மனமே சுயநலம் எனும் குணமாகும். இங்குள்ள சுயநலவாதிகள் அன்றாடம் தனது வேலை, தனது குடும்பம், தனது சுற்றம், தனது நண்பர்கள், தனது உறவுகள் என வாழ்ந்து கழிக்கிறார்கள். தேவைக்கு மட்டும் பயன்படுத்தினால் அதற்குப் பெயர் பாசம் அல்ல சுயநலம். உலகத்தின் குறைகளை எல்லாம் கண்டுபிடிக்கும் சிலருக்கு தன் குறைகள் மட்டும் தெரியாமல் போவதுதான் சுயநலம். சுயமாக உன் நலத்தை மட்டும் பார்ப்பதால்தான் உன் பெயர் சுயநலமா?

சுயநலமாய் நடந்துகொள்வோர் அந்த நேரத்து வேலையை மட்டுமே கருத்தில் கொள்வர். சில ஆண்டுகளுக்குப்பின் என்ன நடக்கும் என்பதை அவர்களால் அனுமானிக்க முடியாது. தனது நலத்தை மட்டும் கருத்தில்கொண்டு செயற்படுபவர்கள் மற்றவர்களைப்பற்றி சிந்திப்பது குறைவு. தமக்கென்று ஒரு வட்டத்துக்குள் வாழ்பவர்கள். அதனால் அவர்களது அறிவு விரிவடைவதில்லை. தங்கள் சுயநலத்துக்காக பேசும் ஒரு சிலர் நமக்கு தேவையான நேரத்தில் தோள்கொடுக்கமாட்டார்கள். அவர்களை எதிர்பார்ப்பது முட்டாள்தனம். சுயநலம் நீடிப்பதையே அவர்கள் விரும்புவார்கள். சுயநலமானவர்களையே பார்த்துப் பழகியதால் அன்பு காட்டும் யாரைப் பார்த்தாலும் அச்சமே அவர்களுக்கு தோன்றுகிறது. சுயநலமான மனிதனுக்கு சுயநினைவு தேவை. ஆனால் அதை இங்கு காண்பது அரிது. அடுத்தவர் எப்படிப் போனால் எனக்கென்ன என்ற சுயநல எண்ணம் மேலோங்கியுள்ளது. இங்கு சுயநலம் ஒரு தனிப்பட்ட மனிதனில் மட்டும் காணப்படும் குணமல்ல. தொழில் நிலையங்கள், குடும்பம், இனம், அரசியல் என எல்லாவற்றிலும் வியாபித்துள்ளது.

சுயநலத்தை முன்னிறுத்தாமல் பொதுமக்களுக்கென்றே அனைவரும் பயன்பெறும்படி வாழ்பவர்கள் அரிதே. சுயநல குணம் வளரும் சூழ்நிலையைப்பொறுத்து, போட்டி என்று வந்தவுடன் தோல்வியை சந்திக்கத் திறனில்லாதவர்கள் சுயநலப்போக்கினை கடைப்பிடித்து வெற்றிபெற நினைப்பது சகஜமாகிவிட்டது. இவர்கள் தம் நன்மையை மட்டும் நினைப்பவர்கள். இவர்கள் எவ்வளவுதான் படித்திருந்தாலும், பணம் படைத்திருந்தாலும், ஆன்மிகவாதிகளாக இருந்தாலும் இவர்களுக்கு வாழ்க்கையில் நல்ல விடயங்கள் நடப்பது குறைவாகவே இருக்கும். வாழ்க்கையில் வெற்றிபெற்ற மனிதர்கள் ஒவ்வொருவர் பின்னணியில் சுயநலத்தை யன்றி பொதுநலத்தையே காணமுடிகிறது. வாழத் தகுதியற்ற இடம் இங்கு உள்ளது

*கருணையில்லா அழகு பயனற்றது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சொல்லும் அளவுக்கு வாழ்வை அமைத்துக்கொள்ளக் கூடாது. சுயநலவாதிகளிடமிருந்தே நாம் அதிக வாழ்க்கைப் பாடத்தைக் கற்றுக்கொள்கின்றோம். சுயநலம் சார்ந்து சிந்திப்பதும், செயற்படுவதும்தான் இங்குள்ளவர்களின் மன அழுத்தத்துக்குக் காரணம். காதல் விவகாரத்தில்கூட சுயநலத்தின் பாதிப்பைக் காணலாம். இப்போதெல்லாம் தனக்குக் கிடைக்காத காதலி வேறு யாருக்கும் கிடைக்கக்கூடாது என்ற மன ஆளுமைப் பிறழ்வுமிக்க சைக்கோத்தனமாக சிலர் நடந்துகொள்கிறார்கள். சிலர் குடும்பப் பிரச்சனை, கடன் தொல்லை, காதலில் தோல்வி, பிள்ளைகளால் தொல்லை ஆகிய பிரச்சனைகளால் சிறிதும் யோசிக்காமல் அடுத்த நிமிடமே வாழ்வில் விரக்தியுற்று தற்கொலை எனும் கோழைத்தனமான முடிவெடுத்து தம்சார்ந்த உறவுகள், பெற்றோர், பிள்ளைகள் எல்லோரையும் தவிக்கவிட்டு, ஏங்கவிட்டு செல்கிறார்கள். இவர்களும் சுயநலவாதிகளே.

படைத்தவன் இறைவன். இவ் உலகை மானிடர் பண்புடன் நலமாய் வாழ்ந்திடவே. "உலகம் வேண்டுவது ஒழுக்கமே. சுயநலம் தீயஒழுக்கம். சுயநலமற்றதே நல்லொழுக்கம்" என்றார் விவேகானந்தர். எவ்வளவு படித்திருக்கின்றோம் என்பதில் அல்ல பிறரிடம் எப்படி நடந்துகொள்கிறோம் என்பதைப் பொறுத்தே நாம் மதிக்கப்படுவோம். "வாழ்க்கையை வெறுமனே வாழாதீர்கள். உங்களுக்கென்று ஒரு வாழ்க்கையை வடிவமைத்து வாழுங்கள்" என்றார் ஜப்ரான். "பன்றிகளோடு மல்யுத்தம் செய்யாதீர்கள். நீங்கள் அழுக்காவீர்கள்" பெர்னார்ட்ஷாவின் பொன்மொழி. "உங்களை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்" சோக்கிரடீசின் கருத்து. "எண்ணுவது உயர்வு" வள்ளுவர் கூறியது. இவற்றை சுயநலத்துடன் இணைத்துப் பாருங்கள். சுயநலப் பிணைப்பு அற்றுப்போகும். எமது வாழ்க்கையின் நோக்கம் மனநிறைவுள்ள, பரஸ்பர மரியாதையும், நாகரிகமான நடத்தையும் கொண்ட மனிதர்களை உருவாக்குவதே ஆகும். பிறப்புக்கும் இறப்புக்கும் இடையே நாம் வாழும் வாழ்க்கை அர்த்தமானதாக இருக்கவேண்டும். ஏதோ வாழ்ந்தோம் என்று இல்லாமல் வாழ்ந்தோம் என்று வாழ்வு இருக்க சுயநலம் விரட்டப்பட வேண்டும்.

சுயநலம் என்பது எவ்வளவு கொடுமை என்பது அனுபவித்து பார்த்தவர்களுக்குத்தான் தெரியும். பக்கத்துவீட்டுக்கு சுயநலவாதி குடி வருகிறார் என்றால் ஏழரையும் கூட வருவதாகத்தான் எடுக்க வேண்டும். சுயநலம் பொதுவாழ்வைச் சிதைக்கும். உலகம் என்றுமே சுயநலமாக இருந்ததில்லை மனிதன் மட்டுமே. சுயநலமான மனிதன் சுதந்திரமான உலகை சிறைப்படுத்துகிறான். சுயநல சிந்தனை உன் வாழ்வை வளமாக்காது. சுயநலமாய் வாழ்வதை விட கோமாளியாய் வாழ்ந்துவிடுவதுமேல். சுயநலத்துக்காக அடுத்தவரின் உணர்வில் விளையாடாதே. அடுத்தவரின் உணர்வுகளுக்கும் மதிப்பு அளித்து வாழவேண்டும். சுயநலத்துக்காக ஓடிக்கொண்டிருக்கும் சமூகம் யாருக்காகவும் நிற்க முயற்சிக்காது. இங்கு ஓடிக் கொண்டிருப்போர் அதிகம். அவர்கள் நிற்கத் தெரியாதவர்கள்.

எனது குடும்பம், எனது பொருள், எனது சொத்து என்ற சுயநலம் மனிதனின் சிந்தனைகளில் உலாவரும் இந்த நேரத்தில் நமது சுற்றுச்சூழல், நமது பிரதேசம், நமது நாடு என்று மனம் எப்பொழுது ஏங்கத்தொடங்குகிறதோ அன்றே புதுமை மனிதன் பயணம் செய்யத் தொடங்குகிறான். அன்றுதான் சுயநலம் மறைந்ததாகக் கருதப்படும்.

*திடமான உடலில்தான் திடமான மனம் இருக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சற்குருநாதனே சத்ய சாயி பாபா வரவேண்டும் நீயும் பிரேம சாயியாய்

– திருமதி பரமேஸ்வரி நடராஜா அவர்கள் –

அன்பென்ற சொல்லுக்கு அர்த்தம் தந்த பாபாவே
பண்பென்ற சொல்லுக்கு அர்த்தம்உன் வாழ்வென்றாய்
கன்மவினை போக்கியெனை ஆட்கொண்ட குருநாதா
துன்பம் துடைத்தென்னைத் தூய்மைசெய்த சற்குருவே.

ஆல காலமுண்டு அகிலம் காத்த
நீல கண்டனும் நீயல்லவோ
உலகாளும் காவலனாம் அந்த
நீல வண்ணக் கண்ணனும் நீயல்லவோ.

ஆதி சிவனாய் போதி மாதவனாய்
ஆதி சக்தியாய் சோதி சொரூபமாய்
கந்தனாய்க் கணபதியாய் கண்ணனாய்
விந்தை செய்திட்ட வித்தகம் என் சொல்வேன்.

புத்தராய் யேசுவாய் நபிகள் நாயகமாய்
எத்தனை எத்தனை அற்புதம் காட்டி - என்
சித்தமதைச் சீர் செய்த குருநாதா
சத்குருவே சதாசிவனே நின்தாள் சரணமையா.

சீரடி சாயியாய் சத்ய சாயியாய்
பூரண குருவாய் வந்து ஆட்கொண்ட பாபாவே
நாரணனே நிலமிசை நீயும் மீண்டும்
வரவேண்டும் பிரேம சாயி யாய்.

குருபரனே பரம்பொருளே சாயிராமா - இந்த
திருநாட்டின் திரு விளங்க வரவேண்டும் - உன்
திருப்பாதம் இத் திருநாட்டில் பதிய வேண்டும்
தருமம் காக்கும் தலைமகனாய் நீயும் வரவேண்டும்.

அன்புடனே உனையழைக்கும் பக்தர்முன்னே
இன்பமுடன் விளையாட வரவேண்டும்
அன்னையர் தாலாட்டிச் சீராட்ட நீயும்
சின்னம் சிறிய பாதம் பதித்து வரவேண்டும்.

*உழைக்கக் கற்றபின் பொறுமையையும் கற்க வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பும் அருளும் அள்ளித்தர வரவேண்டும்
பொன்னும் பொருளும் கூடவே வரவேண்டும்
உலக மெல்லாம் ஒரு குடைக்கீழ் ஆளவேண்டும்
கலகமின்றிக் காசினி சாந்தி பெறவேண்டும்.

பாமாலை பூமாலை சூட்டியுன்னை அழைக்கின்றோம்
தாமதம் செய்யாமல் நீயும் வர வேண்டும்
பூமகளின் மடியில் நீயும் தவழ வேண்டும்
நாமகளும் உனை வாழ்த்திப் பாடவேண்டும்.

வரவேண்டும் வரவேண்டும் குருநாதா - எங்கள்
குரல் கேட்டு நீயும் வரவேண்டும் சற்குருநாதா
சிரம் தாழ்த்தி வணங்குகின்றோம் குருநாதா
சரணம் சரணம் சரணமையா சற்குருநாதா.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி
குருவடி சரணம் திருவடி சரணம்




புதுக்குடியிருப்பு, கல்லுண்டாய் பகுதியைச் சேர்ந்த தரம் - 07இல் கொட்டடி நமச்சிவாய வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவனுக்கு 45,000. 00 ரூபா பெறுமதியான துவிச்சக்கரவண்டி சந்நிதியான் ஆச்சிரமத்தினால் வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்



ஞானச்சுடர் ஐப்பசி மாத சிறப்புப்பிரதி பெற்ற அன்பர்கள்.



விசுவாசமே பணத்திலும் மதிப்பு வாய்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாடசாலை வரவொழுங்கற்ற பிள்ளைகளின் வரவை மேம்படுத்தும் நோக்கில் வவுனியா ப.நோ.கூ. சங்கத்திற்கு கார்த்திகை மாத நிதியாக 85650. 00 ரூபா வழங்கப்பட்டது. வவுனியா கல்மடு பூம்புகார் கண்ணகி வித்தியாலயத்தின் மூத்தோர் தின நிகழ்வுக்காக 170,000. 00 ரூபா பெறுமதியான ஆடைகளுடன் 30,000. 00 ரூபா நிதியும் வழங்கப்பட்டது.



எங்கே அன்பு இருக்கிறதோ அங்கே நம்பிக்கையும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






⇧ சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப் பட்டுவரும் சமுதாயப் பணிகளின் வரிசையில் பண்டாரவளை ப/ கிரேக் தமிழ் மகாவித்தியாலயத்தின் பயன்பாட்டிற்கு 58,000. 00 ரூபா பெறுமதியான அச்சுப்பிரதி எடுக்கும் இயந்திரம் பாடசாலை முதல்வர் திரு எஸ். சவுந்தரராஜன் அவர்களிடம் வழங்கப்பட்டது.

பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் கோரிக் கைக்கு அமைவாக வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கைக்காக 200 பயனாளிகளுக்கு தேவையான விவசாய உள்ளீடு களிற்காக 40,000. 00 ரூபா நிதி அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப் பட்டுவரும் சமுதாயப் பணிகளின் வரிசையில் முல்லைத்தீவு, அம்பகாமம் கிராம மக்களின் கோரிக்கைக்கு அமைவாக 788,000. 00 ரூபா நிதிப் பங்களிப்பில் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் பொறுத்தப்பட்டது.

*அதிகாரம் ஆளை அடையாளம் காட்டும்.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சமுதாயப் பணிகளின் வரிசையில் யா/ அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு 15,000. 00 ரூபா பெறுமதியான நூல்கள் வழங்கப்பட்டன.

ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்கத்தால் நடாத்தப்பட்ட விழாவுக்காக மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்குவதற்காக 42,000. 00 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மழை வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணம் - கல்லுண்டாய், புதிய குடியிருப்பு J/135, J/136 கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த 59 குடும்பங்களுக்கு 295,000. 00 ரூபா பெறுமதி யான உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டது. சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றும் இப் பணிகளுக்கு அனுசரனையாக யாழ். கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள சுந்தரம் மருந்தகம் நிறுவனத்தினர். 250kg அரிசியினை வழங்கி இப் பணியை முன்னெடுத்துச்செல்ல உதவினார்கள்.



அறிவுரை நல்லதானால் யார் சொன்னாலும் கேள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடந்த சில நாட்களாக இடம்பெற்றுவரும் காலநிலை மாற்றத்தினால் ஏற்பட்ட மழை வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்டுவரும் சங்கிலியன் தோப்பு, நல்லூர் கிராம சேவையாளர் பிரிவு J/109 பகுதியைச் சேர்ந்த 78 குடும்பங்களுக்கு 390,000. 00 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் சந்நிதியான் ஆச்சிரமத்தால் வழங்கப்பட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தில்லைக் கூத்தனின் ஆடல் காண வாரீர்

– *திருமதி சிவனேஸ்வரி பாலகிருஸ்ணன்* அவர்கள் –

## சிதம்பரம் நடராஜர்

அல்லல் என்செயும் அருவினை என்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தம்தான் என்செயும்
தில்லைமா நகர்ச் சிற்றம் பலவனார்க்கு
எல்லையில் லதோர் அடிமை பூண்டேனுக்கே

(அப்பர் சுவாமிகள்)

தேன் தமிழ் ஒலிக்கும் தென்னாட்டில்; தாயிற் சிறந்த தயாவான தத்துவனும், மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடருமான மகேஸ்வரனுக்குத்தான் எத்தனை! எத்தனை ஆலயங்கள். அத்தனை ஆலயங்களுமே தனிச்சிறப்புக் கொண்டவையாக; ஐயன் ஈசனின் அருள்திறனுக்கு நிதர்ஸன சாட்சியாகத் திகழ்கின்றன.

கோயில் என்றால் சிதம்பரம், தில்லைத் திருச்சிற்றம்பலம் என்ற சிதம்பர நடராஜப் பெருமானையே குறிக்கும். "மன்னு புகழ்சேர் தில்லை" கோயில்களிலே முதன்மையானது. மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றாலும் விஷேச சிறப்புப்பெற்றது. இத் தலமூர்த்தி "ஓம்" எனும் பிரணவ வடிவாக நின்று நாதாந்தக் கூத்தாடும் நடராஜப் பெருமானாவார். தலம் - சிதம்பரம், தீர்த்தம்- சிவகங்கை, மூர்த்தி- அம்பலக்கூத்தன்.

சிதம்பரத்திற்குரிய பழம்பெயர் புலியூர் என்பதாகும். ஐந்தெழுத்துச் சொருபியாக விளங்கும் பெருமான்; ஐந்தொழில்களையும் தம் திருக்கூத்தின்மூலம் நிகழ்த்திக் கொண்டிருக்கிறார். இக் கோயிலில் ஐந்து சபைகள் உள்ளன. சிற்சபை (சிற்றம்பலம்), கனகசபை (பொன்னம்பலம்), நிருத்தசபை (தேர் அம்பலம்), தேவசபை (பேரம்பலம்), ராஜ்சபை (மன்றம் - ஆயிரங்கால் மண்டபம்) என்ற ஐந்து சபைகள் சிறப்புற்று விளங்குகின்றன. மற்றொரு சிறப்பு திருமால், சிவன் சந்நிதிகள் ஒரே இடத்தில் நின்று தரிசிக்கக்கூடியதாக அமைந்துள்ளது.

பூமியின் இதயம் சிதம்பரமே என்று கீர்த்தனை பாடுவார்கள். தில்லை மரங்கள் அடர்த்தியாக வளர்ந்தபடியால் தில்லைவனம் என்றழைக்கப்படுகிறது. ஈசனை புலிக்கால்களையுடைய வியாக்ரபாதர் வழிபட்டதால் "பெரும்பற்றப்புலியூர்" என்ற பெயர் ஏற்பட்டது. திருவாசகத்தில் மாணிக்கவாசகர் கோயில் என்று சிறப்பித்து இருப்பது சிதம்பரத் தலத்தையே ஆகும்.

அருவ வழிபாடு என்னும் உருவமற்ற வெற்றிட வழிபாடு சிற்சபைக்கு வலப்புறத்தில் உள்ள ஒரு சிறிய அறையில் நடைபெறுகிறது. இங்கு தங்கத்தாலான ஒரு வில்வமாலை மட்டுமே தொங்கவிடப்பட்டிருக்கும். அதன் இரகசியம் இங்கு இறைவன் ஆகாயம் எனும் வெட்டவெளி வடிவில் உள்ளார் என்பதுதான் இதுவே சிதம்பர ரகசியம் எனப் பக்தர்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணரப்படுகிறது. நாயன்மார்கள் நால்வரும் கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு என ஒவ்வொரு கோபுர வாசல் வழியாக வந்து தில்லை நடராஜரைத் தரிசித்திருக்கிறார்கள். சிதம்பரம் பஞ்சபூதத் தலங்களுள் ஆகாயஸ்தலம். நடராஜரின் ஐந்து சபைகளில் முதலாவதான கனகசபை இங்குதான் உள்ளது. திருமுறை சுவடிகள் இருக்குமிடத்தை விநாயகர் வழிகாட்ட நம்பியாண்டார் நம்பி கண்டுபிடித்த ஸ்தலமும், நந்தனார் இறைவனுடன் ஜோதியாகக் கலந்த தலமும் சிதம்பரம்தான்.

சிதம்பரத்தில் உள்ள நடராஜர் கோயிலில் ஒரே இடத்தில் இருந்துகொண்டு நடராஜரையும், கோவிந்தராஜரையும் தரிசிக்கலாம்.

திருச்சிற்றம்பலம் எனச் சொல்லும்போதே நம் நினைவுக்கு வருவது திருமுறை சுவடிகள் கிடைத்த சிதம்பரம்தான். சிதம்பரத்தின் நான்கு எல்லைகளில் கிழக்கில் மாரி அம்மன், மேற்கில் எல்லையம்மன், வடக்கில் தில்லைக்காளி, தெற்கில் வெள்ளந்தாங்கி அம்மன் எல்லைத் தெய்வங்களாக இருந்து காப்பதாக ஐதீகம். சிற்றம்பலம் என்பதன் பொருள் ஞானம் நிறைந்த அரங்கம் என்பதாகும்.

சிதம்பரத்தில் மார்கழித் திருவாதிரை வெகு விசேஷமாகக் கொண்டாடப்படும்.

பஞ்சபூதங்களில் ஆகாய சக்தியான சிதம்பரம், வாயு சக்தியான காளகஸ்தி, பூமி சக்தியான காஞ்சி ஆகிய மூன்றும் ஒரே நேர்கோட்டில் இருப்பதாக இன்றைய விஞ்ஞானிகள் கண்டுபிடித்ததை; திருமூலர் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சொல்லிவிட்டார்.

சிதம்பரம் கோயில் மனித உடல் தத்துவத்தை வைத்தே உருவாக்கப்பட்டது. மனித உடலில் ஒன்பது வாசல்கள் இருப்பதுபோல கோயிலுக்கும் ஒன்பது வாசல். இங்கிருக்கும் சிவகாமசுந்தரி அம்மன் கோயிலின் பிரகாரத்தில் சித்திரகுப்தருக்கும் தனிச் சந்நிதி உண்டு. நந்தனார் என்ற தூய பக்தர் நடமாடிய இடம்.

சிதம்பரத்தின் நான்கு கோபுரங்களும் மகாமேரு மலையைப்போல் திகழ்கின்றன. அவற்றைச் சுற்றி இருக்கும் மதில்களிலே நவரத்தினங்கள் பதிக்கப்பட்டு ஒளி வீசுகின்றன. ஆங்காங்கே அமைந்துள்ள கம்பங்கள் மேலுலகை அளப்பதுபோல உயர்ந்து நின்று ஒளிர்கின்றன. ஆயிரங்கால் மண்டபத்தின் மணி ஒலியோடு காற்று வீசுகிறது.

இந்தத் திருக்கோயிலின் தீர்த்தத்தை "சிவகங்கை" என்பர். அது கங்கையைவிடப் புனிதமானது.

ஆலிலையில் எழுந்தருளிய திருமாலும், பிரமனும்கூட அறிய இயலாத சிவபெருமான் இங்கே அம்பலத்தில் ஆடுகின்றான். வரும் பக்தர்களுக்கு அருள்புரிகின்றான். வேதங்களுக்கெல்லாம் முதல்வன் சிவபெருமான். அவரருகே அன்னையாம் சிவகாமவல்லியும் எழுந்தருளியிருக்கிறாள். விண்ணோர் முதல் சிறந்த தவங்களைப் புரிவோரும், மனிதர்களும் தங்கள் குறை தீரவேண்டுமென்று இங்கே வந்து வணங்குகிறார்கள்.

மூவாயிரம் புனிதர்கள் அந்நகரிலே. சைவர் திருவீதிகளில் மடங்கள் நிறைந்திருக்கும். சத்திரங்கள் இருக்கும். "பசிதீர வாருங்கள்" என அழைத்து எல்லோருக்கும் உணவளிப்பார்கள். சோலைகள், பூக்கள் நிறைந்த குளங்கள், செழிப்பான வயல், ஓய்வின்றிப் பெருகும்

*பேச்சைவிடச் செயலுக்கே வலிமை அதிகம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னிநதி, எங்குநோக்கிலும் வளம். இவற்றைக் கண்ட தேவரும் மூவரும் வியந்து "சிவத்தலங்களுக்கெல்லாம் திலகம் இந்தத் தில்லைதான்" எனப் போற்றுவார்கள். அந்த தில்லை நடராஜனை, ஈசனை, சிவகாமிநேசனை வாழ்வில் ஒரு தடவையாவது சென்று தரிசித்து அல்லல்பிறவி அறுத்து, அவன் திருவடிசேர அப்பெருமானே அருள்புரிய அவன் திருவருள் வேண்டிப் பிரார்த்திப்போமாக.

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க.


(தொடரும்...

## பரிதாபத்துக்கு உரியவன்

ஒருமுறை கிருபானந்தவாரியாரிடம் ஒருவர், "எந்த மனிதனைப்பற்றி நீங்கள் அதிகம் பரிதாபம் கொள்கிறீர்கள்?" என்று கேட்டார்.

அதற்கு வாரியார், "கொடிய புலியைப்போல முதுமை பின்னே பயமுறுத்தி நிற்க, பகையாளிகளைப்போல பலவித வியாதிகள் உடலைத் துன்பம் செய்துகொண்டிருக்க, ஒரே அடியால் உடைந்திடும் மண்பாண்டத்தில் நிரப்பும் தண்ணீர்போல ஆயுள் குறையும் மனிதன், இன்னொருவனுக்குத் துன்பம் செய்யத் துணிகிறானே, அந்த மனிதனைப்பற்றித்தான் நான் பரிதாபம் கொள்கிறேன்" என்றார்.

## துயர் பகிர்கின்றோம்



சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுக் குழுவின் செயற்பாட்டு உறுப்பினராகவும், ஆசிரியராகவும் விளங்கும் திரு ச. வாகீசன் அவர்களின் தந்தையார் கந்தசாமி சத்தியநாதன் அவர்கள் கடந்த 29.10.2024 அன்று இறைபதம் அடைந்த செய்தி கேட்டு மிகவும் மனம் வருந்துகின்றோம்.

அமரர் அவர்கள் உயிருடன் இருந்த காலத்தில் வாகீசன் அவர்கள் உயர்நிலை அடைவதற்கு மிகவும் உறுதுணையாக இருந்து அமரரின் குடும்பத்திற்கும் ஒரு உந்துசக்தியாக விளங்கியவர்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய சந்நிதி வேலவனை வேண்டி எமது மனத்துயரினைப் பகிர்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*உயர்வாகக் கருதினால் உயர்ந்திட முடியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்
# வாசகர்போட்டி 2024

**வினாக்கள்**

01) ஆளுமையுள்ள ஆன்றோனாக வருவதற்கு எமக்கு எது தேவை?
02) மனித விழுமியங்களின் உள்ளடங்களாக அமைபவை எவை?
03) இல்வாழ்வானின் இன்றியமையாத கடமை யாது?
04) இறவாத பெருவாழ்வை எமக்கு அளிப்பது எது?
05) இந்து மதத்தின் மூல நோக்கம் என்ன?
06) மனிதனின் நரம்பு முடிச்சுக்கள் பற்றி விளக்கியுள்ள நூல் யாது? இயற்றியவர் யார்?
07) மூவேந்தரையும் சிறைப்படுத்திய செம்மையாளன் யார்?
08) வாழ்க்கையின் மகிழ்ச்சி எதில் தங்கியிருக்கிறது?
09) நடராஜப் பெருமானின் ஆனந்த நடனத்தை நேரில் தரிசித்தவர்கள் யாவர்?
10) கிரிவலம் வருவதற்கு ஏற்ற இடம் யாது?
11) குன்றென உயர்ந்து நிற்கும் பீடம் யாது?
12) ஞானத்தின் கொழுந்து எத் திருமேனியைக் குறிப்பது?
13) மனிதனது முன்னேற்றத்திற்கு அடிப்படையாக அமைவது எவை?
14) மோனம் எதற்கு அடித்தளமாக விளங்குகின்றது?
15) உண்மையான மனிதர்களிடம் குடிகொண்டிருக்கும் இலட்சியங்கள் யாவை?
16) தவம் செய்வோன் எந்நோக்கில் இருக்க வேண்டும்?
17) நம் உள்ளத்தில் வளர்க்கக்கூடாதது எது?
18) தேவாத்மா என போற்றப்படும் மரம் யாது? இம் மரத்தில் உறையும் தெய்வங்களின் பெயர் யாது?
19) மனித சமுதாயத்தை நகர்த்துவது எது?
20) தினமும் கொழும்புத்துறைக்குச் சென்று யோகர் சுவாமிகளை வணங்கும் நியமம் பூண்டவர் யார்?
21) நூறு ஆசிரியருக்கு சமன் என்று யாரைக் குறிப்பிடலாம்?
22) எப்பிரதி உபகாரத்தையும் எதிர்பாராது சேவையாற்றுபவர் யார்?
23) பிறப்பு இறப்பு அற்றவனாக இருப்பவன் யார்?
24) சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகளின் பவளவிழா ஞாபகார்த்தமாக வெளியிடப்பட்ட நூலின் பெயர் யாது?
25) வீடுபேறு அடைவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?

*எதையும் தாங்கும் இதயமே சிறந்தது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




போட்டியில் எவரும் பங்குபற்றலாம். ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட விடைகளையும் எழுதி அனுப்பலாம். ஆனால் அவை தனித்தனியாக அனுப்பப்படவேண்டும்.

2024ஆம் ஆண்டு தை மாதம் தொடக்கம் ஐப்பசி மாதம்வரை வெளிவந்த ஞானச்சுடர் மலர்களிலிருந்தே வினாக்கள் எடுக்கப்பட்டுள்ளதால் விடைகளும் மலருக்குள் இருந்தே எடுக்கப்படவேண்டும்.

விடைகளை அச்சிடுவதோ, பிரதி செய்வதோ, போட்டோ பிரதி எடுப்பதோ அனுமதிக் கப்படமாட்டாது.

விண்ணப்பங்களை **வாசகர் போட்டிக்குழு, சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை, செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு** என்ற முகவரிக்கு 20.01.2025 தைமாதத்திற்கு முன்பு தபால்மூலமோ, நேரிலோ கையளிக்கவும்.

போட்டியின் பெறுபேறுகள் தைமாத ஞானச்சுடர் மலரில் வெளியிடப்பட்டு அதன் பரிசில்கள் மாசி மாத ஞானச்சுடர் வெளியீட்டின்போது வழங்கப்படும்.

---

# ஞானச்சுடர் சந்தாதாரரின் கவனத்திற்கு...

வணக்கம்!

தாங்கள் காட்டிவரும் பேராதரவுக்கு மனமார்ந்த நன்றிகள். 2025ஆம் ஆண்டுக்கான உங்களுடைய சந்தாப் பணத்தினைச் செலுத்தி தங்கள் பதிவினைப் புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். புதிய ஆண்டில் பிரதிகளைத் தவறாது பெற்றுக் கொள்வதற்கு வசதியாக தங்கள் சரியான முகவரியைத் தபால் மூலமோ - தொலைபேசி மூலமோ தெரியப்படுத்துமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

*-சைவ கலை பண்பாட்டுப் பேரவை-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழி மாத வாராந்த நிகழ்வுகள்

**06.12.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு:- "குருவாய் வருவாய்"

வழங்குபவர் :- திருமதி கவிதா லலீசன் அவர்கள்

[அதிபர்]

---

**13.12.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு:- "நாமங்களின் மகிமை"

வழங்குபவர் :- திருமதி உமாராணி பேரானந்தம் அவர்கள்

[இளை. ஆசிரியர்]

---

**20.12.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

விடயம் :- "முருகநாம பஜனை"

வழங்குபவர்கள்:- முருகன் அடியார்கள்

---

**27.11.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

# ஞானச்சுடர் மார்கழி மாத வெளியீடு

வெளியீட்டுரை :- திரு சோ. பரமநாதன் அவர்கள்

[இளை. கிராம சேவகர்]

மதிப்பீட்டுரை :- திரு ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்கள்

[இளை. பிரதிக்கல்விப் பணிப்பாளர்]

**324ஆவது மலர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org